முரசொலி

மு. கருணாநி

முரசு 1 | சென்னை 8 — 10 — 54 வெள்ளி | ஒலி 28

உழைத்திடும் உத்தமர்காள்!

உழைத்திடும் உத்தமர்களும் உரம் வாய்ந்த உள்ளங் கொண்டோரும் நிறைந்துகிடக்கும் பட்டி தொட்டிகள் பல உண்டு திராவிடத்தில், அவைகள் எல்லாம் நமது பாசறை ஆக வேண்டும். சில பாசறைகளில் போர்க்கருவி அதிகமிருக்கும். அதைக்கையாள வீரர்கள் குறைவாயிருப்பார்கள். வீரர்கள் அதிகமாகவும் போர்க்கருவி குறைவாகவும் உள்ள பாசறைகளும் உண்டு. கருவிகளை அதிகமாக்கவும் கருவிற்கேற்றபடி வீரர்கள் தொகையைப் பெருக்கவும் அந்தந்த ஊர் முன்னணி வீரர்கள் முன் வரவேண்டும். போர்க்கருவி யென்றதும் இந்த அசகாய சூரத்தனம் வாய்ந்த அரசாங்கம் பயந்து விடப்போகிறது—அது பயப்படா விட்டாலும், "பலாத்காரவாதி" என்ற பட்டத்தை நமக்கு சூட்ட, பகிரங்கப் பலாத்காரக் கட்சிகள் பறைசாற்றிவிடப் போகின்றன! போர்க் கருவிகள் என்று கழக உறுப்பினர்களையும், வீரர்கள் என்று செயற்குழு உறுப்பினர்களையுந்தான் குறிப்பிடுகிறேன். அச்சத்தால் அல்ல! அரசியலில் கடைப்பிடிக்க வேண்டிய கண்ணியத்தால்!

வெஞ்சமர் வராத நேரத்திலும் வீரர்களுக்கு பாசறைகளில் வேலையுண்டு! வேலின் கூர்மையை மழுங்காமல் பார்ப்பதும் — வாளின் வலிமையை சோதித்துப் பார்ப்பதும்—பயிற்சி பெறுவதும் — படையைப் பெருக்குவதும் —இன்னோரன்ன பல! இதே போன்ற கடமைகளில் கழகப் பாசறைகளும் ஈடுபட வேண்டும்.

அறப்போர்களில் கலந்துகொள்ள மட்டுமே வீரர்களின் பட்டியல் பெருகவேண்டுமென்பதல்ல — ஆக்கவேலைகள் பல இருக்கின்றன அவர்களுக்கு. கழகத்தின் பெயரால் நடத்தப்படும்—அல்லது கழகத்தின் தலைமையிலிருந்து அறிவிக்கப்படும் — ஆக்க வேலைகளில் மட்டுமே கலந்துகொள்ள வேண்டுமென்பது மல்ல; நகரத்து மக்களுக்கு ஏற்படும் அரசியல் கலவாத இடையூறுகளில் கூட பொதுநலத் தொண்டு புரியும் பண்பு, கழக வீரர்களுக்கு ஏற்பட வேண்டும், அத்தகைய படைகள் பட்டினங்களிலும், குக்கிராமங்களிலும் பெருகிட வேண்டும், கழகக் கொள்கைகட்கு குந்தகம் விளையாத முறையிலே—கழக வீரர்களிடத்திலும்—கழகத்திடத்திலும் மக்கட்கு அன்பு வளர்கின்ற அளவிலே—அந்தத் தொண்டு செய்யும் தன்மை தொடர்ந்திட வேண்டும்.

உரம்வாய்ந்த உள்ளத்தோடு,

"மக்களைக் கவர்ந்திட" என்கிற வலை வீச்சாக அத்தகைய தொண்டு இருத்தலாகாது என்பதையும் மறந்திடக் கூடாது. அது போன்ற கண் துடைப்புகள் ஹரிஜன இயக்கம் போன்ற பெயர்களால் கதர்சட்டைக்காரர்கள் நடத்தும் நாடகங்கள். திராவிட நாடு பெற உழைக்கிறோம். திராவிட மக்களுக்காக திராவிடநாடு கேட்கிறோம். திராவிட மக்களின் தினசரி வாழ்விலும் இயன்ற அளவு அக்கரை காட்டிட வேண்டும். தினசரி வாழ்விலே ஏற்படும் அல்லல்களை யெல்லாம் தவிர்த்திடத்தான் திராவிடம் பிரிய வேண்டும் என்று சொல்கிறோமென்றாலும்— உதாரணமாக, ஒரு வீட்டிலே நெருப்பு பிடித்துக் கொள்கிறது என்று வைத்துக் கொள்வோம் — அதற்கு நாம், இதுபோன்ற தினசரி வாழ்வுப் போராட்டங்கள் திராவிடம் பிரிந்தால் வராது என்று கூறிக் கொண்டு சும்மாயிருக்க முடியுமா? தீயை அணைக்க ஓடிடத்தான் வேண்டும். அப்படி ஓடிட ஒவ்வொரு ஊரிலும் ஒரு படை யிருக்க வேண்டும். தீ அணைக்கும் படையையும் மிஞ்சிடும் திரர் படையாக அது இருக்க வேண்டும்.

அநாதையாக ஒருவன் இறந்து கிடக்கிறான்—ஒருவன

என்ன — இந்த உத்தமர்கள் (?) ஆட்சியிலே தான் ஓராயிரம் பேர் அப்படி சாவார்களே—பஞ்சாயத்து போர்டோ, நகர சபையோ — அந்தப் பிணத்தை தூக்கலாமா கூடாதா—என்று தீர்மானத்தை ஓட்டுக்கு விடுவதற்குள்ளாக, ஆகவேண்டிய காரியங்களை அமைதியாகவும் சட்ட வரம்பிற்குட் பட்டும் கவனித்திடும் நமது படை உடனே புறப்பட வேண்டும்.

ஊரிலே காலரா வரும்! எப்போதாவது, காங்கிரஸ் மந்திரிகள் வருவர்! காலரா வந்தால் தடுத்திடவும்-காங்கிரஸ் மந்திரிகளுக்கு கருப்புக்கொடி காட்ட கழக உத்திரவு இல்லாவிட்டால் அவர்களைக் கண்டு கிராம நிலைமைகளை உரைத்திடவும்—நமது படைதயாராயிருக்க வேண்டும்.

தொத்து நோய்களை விரட்ட, துஷ்ட தேவதைகளுக்குப் பூஜைபோட சிலர் கிளம்புவர்—அவர்களைப் பழிப்பதுடன் அமர்ந்து விடக்கூடாது! சுகாதார உத்தியோகஸ்தர்களின்

பல முனையில் பணிபுரிவீர்!

உதவியுடன் கிராமங்களை சுற்றிச் சுற்றி அலைந்து — கூறை நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற நமது படை புறப்பட வேண்டும்.

கழகத் தோழர்கள் முயற்சியால்—சுகாதார இலாகாவின் வேலைகளால்-நோய் ஓடிவிடும். காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது என்ற கதைபோல — காளிக்கு பூஜை செய்தோம் காலரா ஒழிந்தது, என்பார்கள் அவர்கள், நீங்கள் சீறி விழ வேண்டாம்–சிரித்தால் போதும்! —நீங்கள் பேச வேண்டிய தில்லை. உயிருக்கு மன்றாடி ஊசி போட்டுக் கொண்டபின்

பிழைத்துக் கொண்டவன் இருக்கிறானே; அவன், அவர்களிடம் பேசிக் கொள்வான் — கையில் கட்டப் பட்ட மஞ்சள் கயிற்றை அவிழ்த்து எறிந்து விட்டு!

இப்படி பல முனையிலும் பணி புரியும் படைவீரர்கள் கிராமாந்திரத் தெருக்களிலே நடைபோட வேண்டும். அப்போதுதான் சுதந்திர திராவிடம் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளும் வலிமை பெறும்.

பல மேடையிலேவிதவைக்கு திருமணம் நடத்தி வைத்திருக்கிறோம், வாழ்விழந்த ஒரு வனிதாமணிக்கு மீண்டும் வாழ்வளிக்கும் விழா நடத்தியிருக்கிறோம். நம்முடைய திராவிடமும் விதவை தான்! வாழ்விழந்த மங்கைதான்! அந்த மறுமணத்தை நடத்த—மறுமலர்ச்சி வழங்க திராவிட விதவைக்குத் திருமணம் செய்து வைக்க—வாழப் போனவளுக்கு வாழ்வுதரசெயல் முறைகள் வகுக்கத்தான் நாம்

தி. மு. க. வில் கூடியிருக்கிறோம். வேறு அணியில் இருந்தவர்கள் நமது அணியிலே காணப்படுகிறார்கள், சுருக்கமாகச் சொன்னால் திராவிடத்தின் மறுமணத்திற்கு மாலைகட்ட—மலர் பறிக்க—மாற்று முகாமில் இருந்தவர்களெல்லாம் மனந்தெளிந்து ஓடி வருகிறார்கள். நம்முடைய முயற்சி கைகூடும் என்பதிலே நமக்கு நம்பிக்கை வளர்கிறது! 'நாசமாய்ப் போக' என்று சபித்தவர்கள் எல்லாம் நாட்டைக் காக்கும் நல்ல தம்பிகள் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

'ஆறு மாதக் கடுங்காவலில்'

விபீஷணருக்கு விடையளிப்போம்!

இந்தக் கட்டுரை ஆச்சாரியாரின் "சக்கரவர்த்தி திருமகனு"க்கு மறுப்பாக அமையாவிட்டாலும், அவருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு வம்புக்கிழுக்கும் சில விபீஷணுதிகளுக்கு தக்க பதிலாக அமைகிற காரணத்தால் அதே தலைப்பின்கீழ் வெளிவருகிறது. [ஆ-ர்]

சமீபகாலமாக ராமாயணப் பிரச்சினை நாட்டிலே தலை தூக்கி நிற்கிறது. ராமாயண கதா காலட்சேபங்களும் நாடக, சினிமாக்களும் நடந்து முடிந்து மறந்துபோய் இருந்த நேரத்திலே மீண்டும் புதிய முறுக்குடன் ராமாயணப் பிரச்சாரத்தைதுவங்கியிருக்கிறார்கள். இப்படி துடிப்போடு துவக்கப்பட்டிருக்கிற இந்தக் காலத்தை நாம் ஓரளவுக்கு வரையறுத்துக் கூறிவிட முடியும். ஆச்சாரியார் அமைச்சர் பதவியிலிருந்துவிரட்டப்பட்ட நேரத்திலிருந்து—என்பதாகக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

ஆட்சியின் மூலமாக தன் இனத்திற்கும், தன் இனத்தைப் பாதுகாக்கும் பாரத ராமாயண புராணக் கருவிகளுக்கும் ஆக்கம் தேட முயன்று திராவிட இனத்தின் அடி பீடத்தையே இருந்த இடம் தெரியாமல் அழித்துவிட முடிவு கட்டி முப்புரியைஉருவிப் புறப்பட்ட சூதின் உருவம்—சூழ்ச்சியின் எல்லைக்கோடு—ஆச்சாரியார் அவர்கள், நினைத்தது பரிபூரணமாக நடக்காது எனத் தெரிந்த காரணத்தால், புதிய முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார். அந்தப் புது முயற்சியின் விளைவுதான்—அந்த சதித் திட்டத்தின் எதிரொலிதான் — ராமாயணத்திற்கு ஏற்பட்டிருக்கும் புதிய பொலிவு!

பழமை—மூட நம்பிக்கை—கண்ட கண்ட கடவுள்கொள்கை—கலாச்சாரத்திற்குமுரண்பட்ட பண்பாடு—இவைகளையெல்லாம் தரை மட்டமாக்கி, பகுத்தறிவு ஒளி பரப்பும்புதியசமுதாயத்தை உருவாக்க ஏங்கி நிற்கும் அறிவுலகம்—அந்த அறிவுலகத்தின் படை வீரர்கள்—அந்த வீரர்கட்கு அனுதாபம் தெரிவிப்போர்—அனைவருமே எச்சரிக்கையாக யிருந்து பணியாற்ற வேண்டிய நேரமிது வென்போம். வீழ்த்திக்கொல்ல வேல் கிடைக்காத காரணத்தால்—கோல்கொண்டாவது கண்ணைக் குத்தி குருடாக்கி விடலாம் என்று எண்ணிக் கிளம்பும் இழிதகையோனுக்கும், அதிகாரம் கை தவறிய காரணத்தால் — இதிகாசத்தைக் கொண்டாவது திராவிட இனத்தாரைக் கபோதிகளாக்கி விடலாம் என்று கனவு காணும்ஆச்சாரியாருக்கும் அதிக வேறுபாடில்லை! நிச்சயமாக இல்லை! அதனால்தான் பூனைகட்டி இருமல் முற்றி, பாடை கட்டிப் பயணம் நடத்த வேண்டிய பக்குவத்தை அடைந்துவிட்ட பாரத ராமாயணங்களுக்கு "கர்ண பூஷணம்", "பூணூல் தரிக்கும் புனித விழா" "கல்யாண வம்" எல்லாம் நடத்திக்களித் திடக்குதிக்கிறது காகபட்டர் பரம்பரை! அந்தப் பரம்பரைக்கு ஏற்படும் ஆசையிலும்—ஆர்வத்திலும் அர்த்தமிருக்கிறது—ஒத்துக் கொள்கிறோம். தன் இனம், தன் சமுதாயம், அந்த சமுதாயத்தின் பரம்பரைப் பாக்கியமான உழைப்பில்லா பெருவாழ்வு, அத்தனையும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வாழ வேண்டுமென்பதிலே அந்தப் பரம்பரை அக்கறை காட்டுகிறது! நரி; புதரிலே பதுங்கி நிற்கிறது நாக்கை நீட்டிக் கொண்டு! ஏன்? தான் வாழ! கொக்கு கரையிலே காத்திருக்கிறது-ஏன்? தன் வயிறைநிரப்ப! நரியும் கொக்கும் தீனி தேடக் காத்திருக்கின்றன-அது அவைகளின் பசியைப் பொறுத்த விஷயம்—நரிக்கும் கொக்குக்கும், முறையே ஒரு மானும், மீனும் நண்பர்களாகி தம் இனத்தவரை அவைகளுக்கு இரையாக்கிக் கொண்டிருந்தால்-மான் மீனும் மற்றதுகள் ஆத்திரப்படாமலிருக்க முடியுமா? மன்னிக்க வேண்டும் நண்பர்களே!-மானினத்திலும், மீன் இனத்திலும் அத்தகைய துரோகிகள் கற்பனைக்குக்கூட கிடைக்கமாட்டா! உதாரணத்திற்காகச் சொன்னேன்; அவ்வளவுதான்! மனித இனத்திலேதான் அவர்களைக் காண முடியும். இராவணன் காலத்து விபீஷணன் முதல் இராஜாஜி காலத்து சிவஞானங்கள் வரையிலேஅத்தகையோரை மனித சமுதாயத்திலேதான் காண முடியும்!

அப்படித் தொன்று தொட்டு விபீஷணர்கள் தொகை வளர்ந்து வருவதாலேதான் இந்த இனம், இன்னும் தன் உரிமையை, தனக்குள்ள அரசு பாத்யதையைப் பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது!

சிவஞானங்களை விபீஷணர்கள் என்பதால் சீறிப் பாய்வோரும் இருப்பர்! உண்மைதான்; விபீஷணர் பெரிய ஆழ்வார்-ராமபக்தர் அறநெறி தெரிந்தவர்-என்றெல்லாம் பாராட்டிப் பாடல் புனைவோருக்கு, விபீஷணர் என்று தன்னை அழைப்பதால் கோபம் ஏற்பட நியாயமில்லை அல்லவா? அதனால் சொல்லுகிறோம்; ஆனந்தமாகவே ஏற்றுக்கொள்வார்கள் விபீஷணப்பட்டத்தை! சீற மாட்டார்கள்! சிந்தை குளிர்வார்கள்! அப்படி அவர்கள் ஆத்திரப் படுவார்களேயானால்-விபீஷணன் என்ற பெயர்களங்கமுடையது-என்பதை ஒத்துக் கொண்டவர்களே யாவார்கள்! ஆகையால் நாம் தாராளமாக ராமபக்தர்களை - ராமாயணம் தூக்கிகளை விபீஷணர் என்று அழைக்கலாம்-தகுதியான பெயர் எனத் தலையசைத்து ஆமோதிப்பர், வால்மீகி கம்பர், வாலேந்திகள்!



கடைந்தெடுத்த விபீஷணத் தன்மையின் முழு உருவமும் வெளிப்படும் வகையிலேயே தோழர் சிவஞானம் அவர்கள் ஒரு கட்டுரை தீட்டியிருக்கிறார்-ராமாயணத்திற்கும், ராமனுக்கும் கம்பனுக் கும்,வால்மீகி முனிவருக்கும் வக்காலத்து வாங்கிக் கொண்டு! அதைப் படிக்கப் படிக்கப் பரிதாபம் மேலிடுகிறது.

அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே-என்றுசொல்லக் கேட்டிருக்கிறோம்; ஆனால் ஆச்சாரியார் எவ்வழியோ அவர் வழியே தொண்டர் படைகளும் முரண்பாடான செயலில் இறங்குவதெனக் கிளம்பியிருக்கும் காட்சியிருக்கிறதே; அது நினைக்க நினைக்க சிரிப்பூட்டுகிறது!

'சக்கரவர்த்தி திருமகன்' எழுத ஆரம்பித்த ஆச்சாரியார், "ராமன் கடவுள் அல்ல-அவதாரம் அல்ல!" என்று உறுதியாக குறிப்பிட்டு, பிறகு போகப் போக, அவனும் அவதார புருஷனே என்று முரண்பாடுடை கட்டுரைகள்எழுதினார்-எழுதியும் வருகிறார். மகா விஷ்ணுவின் அவதாரமான ராமன்-கடவுளின் பிறப்பான ராமன்-என்றும் அடிக்கடி குறிப்பிடுகிறார். கடைசியாக அக்டோபர்-3ம் நாள் "கல்கி" இதழில் கூட "ராமாவதாரத்தில் மானுஷ சுபாவத்தின் போக்கும், அதனுடன் சாதாரண தருமத்தின் விளக்கமும் சேர்ந்துவரும்" என்று "அவதார"த்திற்கு அஸ்திவாரம் அமைத்துக் காட்டியிருக்கிறார். ஆனால், பெரியார் ராமசாமியைத் தாக்குவதற்குப் புறப்பட்ட தோழர் சிவஞானம் தன் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது--அவரது குருவாம் ஆச்சாரியாரை எந்தவகையில் எதிர்த்து நிற்கிறது என்பதைக் கீழே படியுங்கள்.

"கடவுள் மனிதஉடல் தாங்கி, மண்ணுலகில் பிறப்பதில்லை என்பது மதவாதிகளும் அறிந்த உண்மைதான்."

சீடர் சிவஞானம், குருநாதர் ஆச்சாரியாரின் முரண்பட்ட வாதத்திற்கு மற்றுமொரு முரண்பாட்டை இவ்வண்ணம் தருகிறார். "ராமன் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதன்-அவனை விண்ணுறையும் தெய்வமாகப் போற்றினர்" என்றும் சிவஞானம் வாதிடுகிறார்--ஆச்சாரியாருக்குப் பலம் தேட முனைந்தவர், ஆச்சாரியாரின் ஆரம்பப் பாதையிலே போய், அவரை அறியாமலே தடுமாறுகிறார்-பாவம்!

"அயோத்தி வேந்தன் தசரதன், அறுபதினாயிரம் மனைவியரை மணந்து வாழ்ந்ததாக ராமாயணம் கூறுகிறதே; இது அடுக்குமா? பெண்ணுலகம் அங்கீகரிக்குமா? என்றெல்லாம் கேள்வி கேட்டு அங்கலாய்த்துக் கொள்கிறார் ஈ. வெ. ரா! ராமாயணம் இயற்றப்படும்காலம்வரை இல்வாழ்க்கையில் ஒருத்திக்கு ஒருத்தன் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதுபோல ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆம், பெண் கற்பு வற்புறுத்தப் பட்டதேயன்றி ஆண் கற்பு வற்புறுத்தப்படவில்லை. இந்தக் கொடுமைக்கு எதிராக ஆண்கற்பை போதிக்கிறது ராமாயணம்.

தந்தை தசரதன் அறுபதாயிரம் மனைவியரை மணந்தவன்—மைந்தன் ராமனோஏகபத்தினி விரதன். இல்வாழ்க்கைப் பண்பில் எத்தகைய புரட்சிகரமான மாற்றம்!"

மேற்கண்ட இவ்வளவும்எழுதியிருப்பது தோழர் சிவஞானம் தான்! ராமனும் சீதையும்வாழ்ந்த வாழ்க்கைதான் இல்வாழ்க்கைப் பண்பாம்! புரட்சிகரமான மாற்றமாம்!—

எவனோ, ஏதோ சொன்னான் என்று, மனைவியை கர்ப்பத்தோடு காட்டிலே கொண்டு போய்விட்டு விட்டு, நாட்டை

[8-ம் பக்கம்]

தலையங்கம்

சென்னை [8—10—54] வெள்ளி

கவனிக்க நேர மேது?

"பாட்டுக் கச்சேரி முடியும்போது மங்களம் பாடுவதைப்போல, எந்தக் கட்சியினர் கூட்டம் போட்டுப் பேசினாலும்—கடைசியாக சரியாகவோ தவறாகவோ, தி. மு. கழகத்தைப் பற்றிப் பேசித்தான் கூட்டத்தை முடிக்கிறார்கள்—பேசினால்தான் கூட்டம் பூர்த்தியாகும் என்னும் நிலை வளர்ந்துவிட்டிருக்கிறது."

என்பதாக பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் பேசினார்கள்.

'இத்தனைக்குப் பிறகும் நம்மை—நாட்டவரின் உள்ளங்களில் நிலையான இடத்தை நிரந்தரமாகப் பிடித்து விட்டிருக்கிற நமது கொள்கைகளை—மறைத்துவிட எண்ணுபவர்கள், அரசியல் கருத்துக் குருடர்கள்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுநலம் நாடுவோர் வெறுத் தோதுக்க வேண்டிய கொள்கைகளைக் கட்டித் தழுவி, மருந்தன்ன நோக்கங்களை எட்டி உதைப்போர், அரசு கட்டிலேறிகளின் எடுபிடிகள் மட்டுமல்ல—தோடுவானைப் பிடிக்குமளவுக்கு மலிவான திட்டங்கள் வைத்திருப்பதாக முரசு கொட்டும் முகாமிலும் இருக்கத்தான் செய்கின்றனர்; அதைத்தான் அக்டோபர் 4-ந் தேதியன்று சென்னை மெமோரியல் ஹாலில் நடைபெற்ற ஷெட்யூல்ட் வகுப்பினர் சம்மேளனத்தின் தமிழ் நாட்டு ஊழியர் மாநாட்டு நடவடிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. அந்த மாநாட்டைக் கூட்டியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் சீரழிந்த நிலைமையைச் செப்பனிட, தீப்போறி கக்கும் தீர்மானங்களைத் தீட்டியதாகத் தெரியவில்லை. மாறாக—மோதிலால் மைந்தரும்; அரசியல் உலகில் காதறுந்த ஊசியை ஒப்பாரும், வழக்கம்போல் தங்களுக்கே உரித்தான நடையில் நம்மை 'பாஷைப் பிரயோகம்' செய்வார்களே, அதையும் மிஞ்சுமளவுக்கு மாநாட்டின் தலைவர் காப்டன் வெங்கடப்பா நம்மைத் தாக்கியிருக்கிறார். அவர் சொன்னாராம்; தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் உயர்வுக்கு உழைப்பதாக திராவிட கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் செய்துவரும் பிரசாரத்தை நம்பி ஏமாற வேண்டாமென்று! நம்மோடு சிறிதுகாலம் பழகியிருந்து, நம்முடைய கொள்கை மணம் நுககர்ந்து சென்ற சிவராஜ் போன்றவர்கள் கலந்து கொண்ட மாநாட்டிலேதான் காப்டன் வெங்கடப்பா மேற்சொன்ன வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார்.

முட்டவரும் மாடும்—உயிரை வெட்டவரும் பாம்புங்கூட எதிர்ப்பின்றி அடங்கிவிடும்; ஆனால் உன் வாழ்வை அடிமை என்னும் தறி தன்னில் கட்டவரும் சனாதனம் இருக்கிறதே, அதை முழு மூச்சுடனும்-ஒருமித்த பண்புடனும் சாடினால்தான் சாகும் என்று, தென்னகத்தில் முதன் முதலாக முழங்கிய புரட்சிக்காரர்களின் பிரச்சாரத்தைத்தான் தாழ்த்தப்பட்டவர்கள் நம்பக்கூடாதாம்!

வைதீகக் காட்டாறு வளைந்தோடும் வைக்கம் வீதிகளில் படை நடத்தி, புராணீகர்களின் தடை உடைத்த பெரியார் ராமசாமியின் பட்டாளமாம் திராவிட இயக்கத்தவரின் பேச்சைத்தான் தாழ்த்தப்பட்டவர்கள் நம்பக்கூடாதாம்!

சமுதாயத்தில் புகுந்துவிட்ட 'மனு' இருக்கிறதே; அது, திரேகத்தை அணு அணுவாகத் துளைத்தெறியும் க்ஷயரோகக் கிருமிகளை விடக் கொடியதப்பா என்று குரல் கொடுத்து, புராண இதிகாசங்களைத் தீயிலிட்ட பகுத்தறிவு இயக்கம்தான் இப்போது பொய்ப் பிரச்சாரம் செய்கிறதாம்; தாழ்த்தப்பட்டவர்களை ஏய்ப்பதற்கு!

உலக மாபெரும் சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாக இடம் பெற்றுவிட்ட சுயமரியாதைப் பாசறை மீதுதான் காப்டன் வெங்கடப்பா இப்படி தன் கணைகளை ஏவியிருக்கிறார். பாவம்; சீனாவில் மாசேதுங் தோன்றுவதற்கு முன்பு சன்யாட்சேன் செய்த திருப்பணியைத்தான் நாமும் இங்கு தொடர்ந்து நடத்திவருகிறோம் என்பதை உணர முடியாதவர், அவர்! உணர முடியாமல் இப்படி நடிப்பதன் மூலம் அவரைப் போன்ற 'தடித்த தோலர்கள்' வளர்ந்துவரும் நமதியக்கத்தின் பெருமைதனை குறைத்துவிட நினைக்கிறார்கள். பொதுச் செயலாளரின் குறிப்புப்படி அவர்களெல்லாம் 'கருத்துக் குருடர்கள்'; தேசியப் பிணியினால் 'மரத்துப் போன நெஞ்சினர்'! மதவாத மஞ்சத்திலமர்ந்து-ஒன்றுக்கும் உதவாத ராமாயணக் கதைபடித்து—உல்லாச ஓடையில் மிதக்கும் ரஸ்புடீன்களை ஒழித்து, புதுநாடு காணவிழையும் லெனினின் படையினராம் நமக்கு, 'இவர்'களின் தூற்றல்களை கவனிப்பதற்குத்தான் நேரமேது?

ஆசிய ஜோதியின் அந்தரங்கம்

அன்புள்ள அண்ணா,

சென்றவாரம் செய்தித்தாளில், நீங்கள் வெளியிட்டுள்ள செய்திகண்டு திடுக்கிட்டேன். 'பிரதம மந்திரி பதவி சலித்துப் போய் விட்டது' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். காந்தியடிகளுக்கு நேர் வாரிசு என்பதால் மட்டுமல்ல; உலகச் சரித்திரத்தை கரைத்துக் குடித்த பெருந்தகை—அரசியல் மேதை என்பதாலுமே, அந்நிய நாட்டு அரசியல் அறிஞர்களெல்லாம் தங்களை ஆசிய ஜோதி என்கிறார்கள் என்பது நீங்கள் அறியாததல்ல. இந்தியப் பிரதமரின் தங்கை என்ற ஒரே காரணத்திற்காக, எனக்கு எங்கெங்கே எப்படியெப்படி வரவேற்பு களெல்லாம் அளித்திருக்கிறார்கள் தெரியுமா? இந்த அமெரிக்க நாட்டின் தாரைமக்கள் என்னிடம் காட்டிவந்த அன்பை, ஆதரவை இப்போது நினைத்தாலும் நெஞ்சு இனிக்கிறது அண்ணா! ரஷ்யாவிலே இருந்தேனே அப்போது மட்டுமென்ன! அந்த நாட்டு விஞ்ஞானிகள் முதற்கொண்டு என்னை விடுதேடி வந்து கௌரவிக்க வில்லையா? என்னுடைய அரசியல் சாதுரியமா அவர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்ததற்குக் காரணம்? பணக்காரக் குடும்பத்தில் பிறந்தோமே அதற்காகவா? இல்லையே! உங்களின் சகோதர பாசமும் பெருந்தன்மையும் தானே அண்ணா, இவைகளுக்கெல்லாம் மூல காரணம். பதவியை கைவிட்டு விடுவதாக ஏன் இப்படி திடீரென்று முடிவு கட்டினீர்கள் என்றே எனக்கு விளங்கவில்லை. உலகத்தின புரட்சி இலக்கிய அரங்கில் முதலிடம் பெறத்தக்க 'உலகச் சரித்திரத்'தை தீட்டிக் காட்டினீர்கள், இந்தியாவுக்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்திற்கே அந்த நூல் நல்லதோர் கருத்தாக் கருவூலமாக அமைந்திருக்கிறது. அப்பேர்ப்பட்ட ஜவகர்லால்ஜியா இந்தியாவை கைவிட்டு விடப் போகிறார் என்ற வதந்தி ஐ. நா. சபை வட்டாரத்தில் பரவி விட்டதை நினைக்கும் போது உள்ளம் கலங்குகிறது அண்ணா! வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன், நன்றி மறக்காத அன்புத் தங்கை மன்றாடி நிற்கிறாள், உங்களின் பயங்கர முடிவை மாற்றிக் கொண்டு என்நெஞ்சில் தேன் பாய்ச்சுங்கள்.

அன்புள்ள தங்கை
விஜயலெட்சுமி

அன்பு விஜய்,

உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். பாசத்தின் பாற்பட்ட போதனை வாக்கியங்கள் அடங்கிய உன் கடிதத்திற்கு நான் தந்திருக்கும் பதில் உன் மனதை திருப்திப் படுத்தாது என்பதை நானறிவேன். 'பிரதமர் பதவி சலிப்புத் தட்டி விட்டது' என்று நான் சொன்னேன். உண்மையிலேயே அந்த நிலை ஏற்பட்டுவிட்டதென்று நீ நினைத்துவிட்டாய்! நீ என் தங்கை என்ற முறையிலே, நெடு நாட்களாக மூடிவைத்திருந்த ஒருஉண்மையைவெளிப் படுத்துகிறேன், பிரிய சகோதரி, என்னுடைய தலைமைப்பதவியை இந்தியாவில், குறிப்பாக தென்னாட்டில் வரவேற்கிறார்கள் என்று நீ நினைக்கிறாய்! உனக்குத் தெரியுமே, தென்னாட்டுக்கு நான் போனால் என்னென்ன குழப்பங்கள் ஏற்படுகின்றன, எத்தனைபேர் கைதாகிறார்கள் என்பதெல்லாம்.

விஜயா, இன்னொன்றையும் சொல்லிவைக்கிறேன். மக்கள் மன்றத்திலே காங்கிரசிற்கு இருந்த கௌரவம் எப்படி செத்துப் போனது என்றே எனக்கு விளங்கவில்லை. ஒழுங்கீனமாக நடந்து காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களும் காங்கிரசில் சேரலாம் என்று வெளிப்படையாக அறிக்கைவிட்ட பிறகும் காங்கிரசின் உறுப்பினர் பட்டியல் கூடியதாகத் தெரியவில்லை. இதையெல்லாம் எண்ணித்தான், கௌரவத்தோடு, தானாகவே விலகிக் கொள்ளலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். நான் அண்மையில் கொச்சிக்குப் போயிருந்தேனே, அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் படித்திருந்தால் உனக்கு உண்மைபுலனாகியிருக்கும். நான் பேசிக் கொண்டிருந்த போது எங்கிருந்தோ ஒரு ஒலிபரப்பி என் பேச்சைக் குழிக்கிட்டது. "என்னையும் அறியாமலேயே, ஏதோ ஒரு குரல் என்னை அமிழ்த்தப் பார்க்கிறது." என்று கூறிவிட்டேன். அது எந்தக்குரல் என்று நினைக்கிறாய். 'நேருசர்க்காரின்' எதிர்ப்புக் குரல்தான் விஜயா அந்தப் பெருங்குரல். எதிர்காலத்தில் காங்கிரசின் கதி என்னவென்று எண்ணும் போது பெருந்திகில் ஏற்படுகிறது தங்காய்! சித்தம் குழம்புகிறது. பிறபின்,

அன்புள்ள அண்ணன்
ஜவகர்லால்

[கடிதங்கள் கற்பனையே]

நெடுஞ்செழியன்

அடி யடா முரசு—இடி
அதிர் வதைப் போலே!
கடல் குரல் எழுப்பு—பகை
காதினைப் போய்த் தொடட்டும்.
நடத் தடா படையை - நம்
நாட்டை எழுப்பி விடு.
அடி! உதை! குத்து! – வெட்டு!
அனைத் தையும் தொடங்கு.

துடிக்கும் நம் பகைவர் – தமைத்
துண்டுதுண் டாக்கி வரக்
கிடைத்த தடா வேலை - போர்க்
களத்தில் வாட்க ளுக்கு!
அடைக் கலம் என்று - பகை
அரசர் கூறும் வரை;
நடத்து வோம் போரை, - போய்க்
கொண்டு வா தேரை!

எழுச்சி வீரர் களே! – நமை
எதிர்க்கும் நாட்டி னரை;
அழுதிட வைப் பீர் – நீர்
அருவி யைப் போலே!
அழுக் துக சேற்றில் - கல்லை
அழுத்து தல் போலே!
கிழித்து விட்டெறி வீர் - ரத்தக்
கிணறு கள் செய்வீர்!

'பொக்கி கள்' என்றானே! - அந்தப்
பஞ்சாங்க நாட்டு மன்னன்;
முக்கிய மாய் அன்னோன் - தலையை
மோதிடு வீர்' மலையில்!
செக்கச் சிவக்க வைப்பீர் – சென்று
சண்டை செயும் களத்தை!
'கக்கரிக் காய்' அவர்கள் – சீவும்
கத்தியைப் போன்றவர் நாம்!'

திறந்த இவ்வுல கில் - உள
தேசங்க ளத்த னையும்;
பறந்து தாக்கி டினும் – தமிழ்ப்
படை யை வெல்லாது,
பிறை பிறை யாக - நிலவைப்
பிளவு செய்வது போல்;
நறுக்கு மோ வானம் – வட்ட
நெருப்புச் சூரி யனை?

ஊரதி ரும்படி யாய் – மன்னன்
உரைத்த னன் இதுபோல்.
வீர ரெலாம் கேட்டு – ஆ
வேசத் துடன் எழுந்தார்.
காரிய மின்றி அங்கு – வந்த
காவித் துணி முனிவன்;
போர்விழி வேந்த னிடம் – சில
பேசத் தொடங்கு கின்றான்:
சங்கு எடுத் தெறியும் – கிழ
சமுத் திர வேந்தே!
அங்கந் தனை அழிக்கும் – கொலை
ஆயுதக் கூட்டத் தொடு'
எங்கு அனுப்பு கின்றாய் - நீ
இப்படை தன்னை? என்றான்.
சிங்கத்தை வெல்லு கின்ற - நெடுஞ்
செழியன் சொல்லு கின்றான்;
சுவைக்கும் செந்தமி ழில் - தம்
சொந்த மொழி நுழைக்கும்;
சிவத்த தோலுடை யோர்,–பொருள்
சுரண்டும் தீய வர்கள்;
புவி தனைக் கெடுப்போர் – பொய்
புரட்டு செய்திடு வோர்; – தமை,
அவித்த நெல்லது போல் – யாம்
ஆக்கி வர விடுத்தோம்!
சந்தன நாடு தனை - வேல்
சண்டை யினால் தொடுவேன்.
குந்தள நாட்டி னரைக் - கப்பம்
கட்டிட வைத்திடு வேன்.
கொந்த ளித்து எழுந்த – தமிழ்க்
கூட்டம் சில தினத்தில்;
தந்திர மாய் நடக்கும் - வடக்கைத்
தவிடு பொடி யாக்கும்!

செங்கதிர் போய்ப் படியும்-மேற்
றிசை தனைப் பிடிப்பேன்.
கங்கைக் கரை யினரை-என்
கத்திகள் குத்தி வரும்!
அங்கு மிங்கும் இருக்கும்—நா
டனைத்தும் காலடியில்!
எங்கும் எனது கொடி—பிற
கெல்லாம் எனது இட்டம்!

வெள்ளிச் சிரிப் புடைய—வீர
வேந்தன் இது உரைக்க;
குள்ள உருவுடை யோன்-இது
கேட்டுச் சிரித்து; புது
வெள்ளத்தைப் போல் சிவந்த-மேல்
வேட்டி தனை எடுத்துப்
பிள்ளையைப் போல் தனது-தோளில்,
போட்டனன். பேசு கின்றான்:

குப்பை உலகம் இது!-இங்கு
காணும் பொருள் அனைத்தும்,
சொப்பனம் போல் மறையும்-உருத்
தோற்றங்கள், கண் மயக்கம்.
உப்பு நிறைந்த உடல்-பெற்றோர்
எச்சிலின் அச்சுகள் நாம்.
எப்பொழு தும் அழுகை-தனை
ஏற்படுத் தும் உலகம்!

விண்ணுக்கு உண்மை யிலே-நீல
வண்ணம்; வடிவு; இல்லை.
கண்ணின் முடிவுகள் தான்-பகற்
காலமும் ராத்தி ரியும்!
விண்ணுல கென் றழைக்கும்-மோட்ச
வீட்டை அடைவதற்கு;
பெண்டு, பிள்ளை, பொருள்கள்-யாவும்
பெருந் தடை கற்கள்!

இதை உண ராமல்-நீ
ஏதேதோ பேசு கின்றாய்.
குதித் திடு கின்றாய். பொங்கிக்
கொதித் திடு கின்றாய்.
அதுகிடக் கட் டும்-உன்
ஆசை நிறை வேறின்;
புது திட்டம் உண்டோ-ஏதும்?
பார்த்தி பனே! என்றான்.
'அத்தனை நாட்டி னுக்கும்-யான்
அதிப ஙி; நிலா
ஒத்த குடை நிழலில்-பல
வருடம் ஆட்சி செய்து;
முத்திரைப் பொன் முடியை-முடிவில்
மைந்த னிடங் கொடுப்பேன்.
சத்த மிடும் உலகில்-பின்னர்
சத்த மிடா திருப்பேன்'.
தூண்டும் வெறி உணர்வால்-தீய
செய்கை புரிந்திடு வோர்;
கூண்டு உலகி னிலே-சுகம்
கண்டவர்; காணு தவர்;
ஆண்டு அனுப்ப வடைந்தோர்-வய
தானவர்; யாவ ருக்கும்;
வேண்டு மன்றோ ஓய்வு? அதுவும்
வேண்டு மன்றோ மூப்பில்?"
"மூள்ளு மனது டையோர்-மூடர்;
முன்னர் பிழை புரிவர்;
உள்ளம் பின்னர் தெளிவர்-இதில்
ஒன்றும் வியப்பு இல்லை.
தெள்ளத் தெளிந்த வர்கள்-குற்றம்
செய்து திருந்து வதில்,
எள்ளள வும் பெருமை-நான்
இல்லை என்றே உரைப்பேன்.

கத்திக் கொலை தனிலே—வீரம்
கண்டு; கடைசி யிலே:
உத்தம னாயி ருக்க—நீ
விரும் புதல் சரியா?
சத்துவ காரி யத்தை—உடனே
செய்திடல் வேண்டா மோ?
உத்தமன் ஆவ தற்கு—நாள்
வாரத்தைப் பார்ப்ப துண்டோ?

சொன்னான் இது போல—முனிவன்.
தேசத்தை ஆளு பவன்;
என்றோ ஒருநாள் நீ— நிச்சயம்
இறக்க வேண்டு மன்றோ?
இன்றே இறந்து விடேன்—என்று
எதிர்த்து கேள்வி இட்டான்.
ஒன்றும் விளங்காமல்—முனிவன்
விழிக்க, வேந்தன் சொல்வான்:

புல்லர் தமை எதிர்த்தே—இனப்
போரிட்ட ராவ ணனை;
நல்ல தமிழ் மகனை—வீர
னாக இறந் தவனை;
பொல்லா அரக்கன் என்றே—பூ
ணூல் கூட்டம் சொன்னது போல்;
வெல்லச் சுவை உலகை—நீ
வேம்பென்று கூறு கின்றாய்.

நீலக் கரு விழியை—பனை
நுங்கு என்றெ பழிக்கும்;
ஓலைச் சுருளது போல்—சுருள்
உள்ளம் வளர்ப் பவனே!
வாலிப ஆனந் தமும்—பெண்கள்
வைத்திருக் கும் இனிப்பும்
சோலை கனிச் சுவையா?—எட்டி
போலக் கசப் பவையா?

முற்றிய தாடி உள்ள—முழு
மூடனே! எப்பொழு தும்,
சுற்றி வரும் உலகம்—விழி
சொப்பனம், மாயம், எனில்;
மற்றவர் தோற்று வித்த—சாதி
மதம் சடங் கனைத்தும்,
கற்பனை ஆகு மன்றோ?—கடவுள்
கருத்தும் பொய்மை அன்றோ?

உடைமை, மக்கள். மனை—சுகம்
ஊட்டும் மனைவி; எலாம்;
தடங்கல் மோட்சத் திற்கு-என்னும்
தியனே! தீயின் புகை;
தடுக்கி வீழ்வ துண்டோ—இந்தத்
தாரணி யில் யாரும்?
குடிக்க நீர் கொடுக்கும்—மணற்
கேணி கவிழ்வ துண்டோ?
செவ்விதழ்த் தாம ரையும்—துள்ளும்
சேல்விழி மங்கை யரும்;
அவ்வள வவ்வள வாய்—வளர்
அந்திப் பிறை நிலவும்;
ஒவ்வொரு ஆசை தரும்—மலர்;
ஓடும் நதிகள்; கண்டு,
இவ்வுல கம் அழகின்—வேலை
என்பதை யார் மறுப்பர்?
திரு விழா இருந்தும்—பெருந்
துக்கத்தை மெச்சி வரும்,
குருக்கள் ஆரி யனே!—சிறு
குள்ள நரிப் பயலே!
திருக் குறள் பிறந்த—தமிழ்
தேசம் முழு வதையும்,
இருட்டு ஆக்கு கின்றாய்—நீ,
என்று உரைத்த படி
எடுத் தனன் கொலைவாள்—வெட்டி
எடுத் தனன் தலையை.
முடிந் ததே மூச்சு—தலை
வீழ்ந் ததே தரையில்!
கொடிய ஆரி யர்கள்—இது
கேட்டு நாடு விட்டு,
எடுத்தனர் ஓட்டம்!—வேந்தன்,
ஏறி னன் தேரில்!

சோகச் சித்திரம்

மாறன் பி.ஏ. (ஹானர்ஸ்)

வானத்தில் இகழ் விரித்து பூத்திருந்த முழு நிலவை இருட்டுக் கள்வன்கிள்ளி எறிந்து விட்டான். அந்த அர்த்த சாமத்திலேதான் அர்ச்சாவின் கோட்டைக் கருகிலே ஒரு பல்லக்கு சுடுகாட்டிற்குச் செல்லும் பிரேத ஊர்வலத்தைப்போல நகர்ந்து கொண்டிருந்தது. புரவி மீது மர்ந்து ராணி சாரந்தா வழி காட்டிக் கொண்டிருந்தாள். காய்ச்சலால் பீடிக்கப்பட்டு எலும்பும் தோலுமாய் அவளது கணவன் சம்பத்ராய் பல்லக்கிலேசெத்துக் கொண்டிருந்தான். இந்நேரம் மொகலாய சாம்ராஜ்யத்தை ஆட்டிப் படைத்து வந்த பந்தல் கண்ட, அன்னியர் வசமாயிருக்கும். பல்லாண்டு காலமாய் வைரிகளின் விலா வொடித்து பந்துலா இனத்தின் பெருமையைப் பறை சாற்றிவந்த அர்ச்சா கோட்டை அடிமைப்பட்டிருக்கும் — சம்பத்ராயால் இந்த சோகக் காட்சியை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. இதே கவலைதான் ராணி சாரந்தாவையும் வாட்டி வதக்கியது. இருதயத்தின் கடைசி துடிப்பு இருக்கும்வரை பகைவரின் குடல் சரித்து சாக வேண்டிய ராஜ வம்சமா இப்படி தப்பி ஓடுவது? சாரந்தாவின்கண்கள்குளமாயின. கோழைச் செயலுக்கு தன் கணவனைத் தூண்டிய குற்றம் தன்னைத் தானே சேரும் என்று நினைப்பு வரும்போது, அவள் உடலின் அணுக்கள் ஒவ்வொன்றும் வெட்கத்தால் நாணிக் குறுகின. திடீரென்று அவளது குழுவினரை மொகலாய சேனை யொன்று வளைத்துக்கொண்டது சம்பத்ராய் அமர்ந்திருக்கும் பல்லக்கின் பக்கம் சாரந்தா தன் குதிரையைத் திருப்பினாள்.

அர்ச்சா கோட்டையில் மொகலாயர் தட்டும் வெற்றி முரசம் சம்பத்ராயின் காதுகளைத் துளைத்தது. சுற்காப்பிற்காக தன்னைச் சூழ்ந்திருக்கும் ஐந்தே வீரர்கள் ஔரங்கசீபின் ஆட்களோடு கத்திகள் வாட்களை மோதும் ஒலியும் அதற்குப் பின்னணியாக அமைந்தது. ராணி சாரந்தாவை சம்பத்ராய் அருகே அழைத்தான்.

"சாரந்தா! என் செல்வமே! பகைவர் கையில் சிக்காமல் தப்பி விட வேண்டுமென்ற உன் ஆசையைநிறைவேற்றிவிட்டேன் நான் கண் மூடுவதற்கு முன் என் உள்ளத்தில் உறைந்துகிடக்கும் என் கடைசி விருப்பத்தை நிறை வேற்றுவாயா, கண்ணே!"

"உங்கள் ஆணைக்குக் காத்திருக்கிறேன், மகாராஜா!"

"சம்மதம் கொடுத்துவிட்டாய், சாரந்தா. வாளைத் தூக்கவும் சத்தின்றி கிடக்கும் நான் வீரனாக சாக வேண்டும், கண்ணே! இதோ என் உடைவாள் இதை என் மார்பிலே பாய்ச்சு"—புயல் எனச் சீறி, புலி என போரிட்டுப் பழக்கப் பட்ட சம்பத்ராய்தான் இப்படி நடுங்கும் கரங்களுடன் சாரந்தாவின் முன்னே தன் உடைவாளை நீட்டினான்.

சாரந்தா பேசாத பதுமையானாள். அவள் எண்ணங்கள் சுழன்றன; கடந்த கால நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அவளது நினைவுத் திரையில் அழியாத ஓவியங்களாகக் காட்சி தந்தன.

★ ★ ★

பந்தல் கண்டு ராஜ்யம் முஸ்லிம்களால் அழிக்கப்பட்டிருந்தால்கூட யாரும் அவ்வளவு வருத்தப்பட்டிருக்க மாட்டார்கள்; ஆனால் சீதலா தேவி மட்டும் என்னவோ அந்தப் புரத்தைக் கண்ணீரால் நனைத்து, இமைகளை வீங்க வைத்துக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்திலேயே இளவரசி சாரந்தாவும் அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டுதானிருந்தாள். இருந்துமென்ன? சீதலாவின் சோகச் சுமை குறைந்ததாகத் தெரியவில்லை.

"சீதலா; என் கண்ணே! அழாதே! உனக்கு மாலையிட்ட என் அண்ணா அனிர்த சிங் வெற்றி தேவியை அணைத்துக் கொண்டுதான் இந்த சீதலா தேவியைக் காணவருவார்; கவலைப்படாமல் தூங்கு பெண்ணே!"

சாரந்தா இன்னும் எவ்வளவோ சொன்னாள். அவளுக்கென்ன தெரியும், புதுமணப் பெண்ணின் காதல் வெள்ளம்! பாவம்; அவள் அழுது கொண்டுதான் இருந்தாள்

சீதலாவை மணவறையில் கைப்பிடித்த அன்றே அனிர்த சிங் வாளும் கையுமாக போர் முனைக்குச் சென்றுவிட்டான். ஆண்டுகள் மூன்றும் ஓடிவிட்டன; திருமணத் தம்பதிகள் மட்டும் இன்னும் சந்தித்த பாடில்லை.

திடீரென்று ஒரு உருவம் அந்தப் புரத்தின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தது. சீதலாதேவி அத்தான் என்றபடி அவனை அணைத்துக் கொண்டாள். தங்கையைப் பார்க்கக்கூடநேரமில்லை; அனிர்த சிங் அந்தத் தையலைத் தழுவிக் கொண்டிருந்தான்!

சாரந்தா வியப்புக் கடலில் மூழ்கினாள். "அண்ணா! வெற்றி முரசம் கேட்கவில்லை; ஆலவட்டம் சுற்றிவிட ஆட்கள் இல்லை; இப்படி தன்னந்தனியனாக வந்திருக்கிறாயே! போர்க்களம் சென்று திரும்பிய பார்த்தாவை பாங்கியர் புடைசூழ வரவேற்க வேண்டியிருக்க, சீதலாவை இப்படி நடுங்கும் விழிகளோடா சந்திப்பது?"—இளவரசி சாரந்தா விளையாட்டாகத்தான் பேசினாள். இருந்த போதும் அனிர்தசிங்கின் உடல் உண்மையிலேஆட்டமெடுத்தது. தையலிடமிருந்து தங்கை பக்கம் திரும்பினான் அனிர்தசிங்.

"ஏன் அண்ணா உன் உடைகள் நனைந்திருக்கின்றன?"

"ஆற்றிலே நீந்தி வந்தேன்"

"எங்கே அண்ணா உன் உடைவாள்?"

இந்தக் கேள்விக்கு அனிர்த சிங் உடனே விடையளிக்க முடியவில்லை. வேங்கையெனப் பாய்ந்து பகைவரின் விழியிலே வேல் எறியும் அனிர்தசிங்கின் முகம் விகாரமடைந்தது. மணக்கோலத்தோடு கண்ட அருமை மனைவியின் அன்பு முகத்தைக் மீண்டும் ஒருமுறை காண்பதற்காக, பகைவரிடம் படைக்கலன்களைக் கொடுத்துவிட்டு தப்பி வந்த கதையை எவ்வாறு அவன் தன் வீரத் தங்கையிடம் சொல்ல முடியும்? சாரந்தா மேலும் மேலும் கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்றாள்.

"உன் வீரர்களெல்லாம் எங்கே அண்ணா?"

"எல்லோரும் களத்திலேயே மடிந்துவிட்டார்கள்..." மயிலின் சாயலாம் சாரந்தா சிங்கமென சீறினாள்.

"தூ...வெட்கமில்லை! பந்துலா இனத்தின் மானம் அழிந்த கதையை இப்படி கூச்சம் இல்லாமல் சொல்கிறாயே...இந்த சேதி சொல்வதற்குத்தானா நம் அப்பா உன்னிடம் அரசை ஒப்புவித்தார்......அண்ணா! நீ உணர்ச்சியற்ற மரக்கட்டையாகி விட்டாலும் என் உடலிலே இன்னும் பந்துலா இரத்தம் ஓடுகிறது ... தயவுசெய்து இங்கிருந்து போய்விடு அண்ணா...... இந்த அரண்மனைக்குள்ளே ஒன்று, வெற்றி முழக்கத்தோடு அனிர்தசிங்கின் ஊர்வலம் வர வேண்டும்; அல்லது எங்கள் தீக்குளியலிலே வெந்து சாம்பலாக உன்னுடைய சவம்தான் வரவேண்டும். இதற்குமேல் இங்கு நிற்காதே அண்ணா"--இன்னும் வேகமாக அவளால் பேசமுடியவில்லை. சாரந்தா தரையிலே சாய்ந்தாள்.

பொழுது விடியும் நேரம். சாரந்தாவைப் போலவே வானமும் தாரை தாரையாக கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது. மின்னலும், இடியும் அரண்மனையின் அஸ்திவாரத்தையே ஆட்டிக் கொண்டிருந்தன. சாரந்தா திரும்பிப் பார்த்தாள்; அனிர்த சிங் அங்கு இல்லை. ஆனால் சீதலாமட்டும் தணலில் மெழுகாக உருகிக் கொண்டிருந்தாள்.

"அண்ணா போய் விட்டாரா, சீதலா!"

"போய்விட்டார், இளவரசி—இனிமேல் திரும்பிவரமாட்டேனென்றுகூறிபோய்விட்டார்என் பிராணபதி!"

"கவலைப்படாதே, சீதலா! புயற்காற்றால் பொற்கோட்டு இமயம் சாய்வதுண்டா? வெற்றி வீரன் அனிர்த சிங்காக உன்அத்தான்திரும்பிவருவார்!"

இதற்குமேலும் சீதலாவால் பொறுமையோடு இருக்க முடியவில்லை. "வீர சுவர்க்கம் அடைவார் என் வேந்தர் என்று சொல்கிறாயா இளவரசி! என் இன்ப விருந்தைக் குலைத்து, என்னை விதவையாக்க எத்தனை நாட்களாக திட்டம் போட்டிருந்தாய்? உங்கள் ராஜபோகத்தைக் காப்பாற்ற என் இதயராஜா தானா அகப்பட்டார்? உனக்குத் திருமணமாயிருந்து உனக்கும் ஒரு இளைஞன் கணவனாயிருந்தால், அடிமை நாயைப்போல் இப்படித்தான் அவனைப் போர்க்களத்துக்கு அடித்துத் துரத்துவாயா?"! சீதலா பேசிக் கொண்டேயிருந்தாள்.

"வாள் எடுக்கப் பயப்படுபவனை, என் வாலிபம் விரும்பினாலும் தொடமாட்டேன், சீதலா! தோள்வலிமை இல்லாதானை என் தேகம் தீண்டாது...எனக்கும் உள்ளம் இருக்கிறது, கண்ணே! இருந்தாலும் உன்னைப்போல மஞ்சத்து மயக்கத்தில் மறவர் பண்பை இழந்து விடமாட்டேன்"

"சாரந்தா! நானும் செத்து விடமாட்டேன், கணவனை அணைத்துக் கொண்டு ஓடி ஒளிகிறாயா, அல்லது ஒளி சிந்தும் வேல் தந்து அவனைக் களத்துக்கு அனுப்புகிறாயா என்பதைப் பார்க்கத்தான் போகிறேன்"

(10-ம் பக்கம்)

அரிய ஆராய்ச்சி நூல்
இலக்கியம் கண்ட திராவிடம்!
ஆசிரியர். கவிஞர்.
நீல. துரைக்கண்ணன்
விலை அணா எட்டு
ஐம்பதுக்கு மேற்கொண்ட இலக்கியச் சான்றுகள் தரப்பட்டுள்ளன.
'ஆங்கில நாட்டில் ஓர் அறிஞர் அண்ணா'
ஆசிரியர்: பெரியார்
விலை அணா 6
விபரங்கட்கு: ஆராய்ச்சி நிலையம்
சென்னை—5

செப்பேடும் - சிறு கல்லும்!

8.

பரிமளாவைத் தூக்கிக் கொண்டு போன அதே நேரத்தில்—நடுக்கடலிலே பயணம் நடத்தும் மாயாண்டிக் கிழவரின் படகிற்கும் புதிய ஆபத்து பிறந்தது. இருட்டிப் போய் சிறிது நேரத்திற்கெல்லாம் ஐயப்பனின் உத்திரவுப்படி தோணியை கரை நோக்கி செலுத்த ஆட்கள் விரைந்தனர். ஆனால் அன்றையதினமும் காற்று அவர்கட்கு சாதகமாக வீசவில்லை. ஆட்கள் தங்கள் உடலை வளைத்து வியர்வை கொட்டக் கொட்ட உழைத்து படகு செலுத்தும் வேலையில் ஈடுபட்டனர். ஐயப்பன்மட்டும் தைரியமாக, "இன்னும் பத்து மைல் தூரம்தான்! ஊராத் துரை லைட்ஹவுஸ் தெரிஞ்சுட்டா அப்பறம் ஓடுற ஓட்டம்— வல்வெட்டித்துறையிலே போயி, டசார்னு இறங்கிடலாம்—உம்-வேகமா விடுங்கடா!" என்று கத்தினன்.

"காற்று சாதகமாக இல்லையே" என்றார் மாயாண்டி!

"சாதகம் இல்லேன்னு பாதகம் பண்ணவேண்டியதுதான்" என்று ஐயப்பன் கிண்டல் செய்தான்.

"என்னப்பா அர்த்தமில்லாமல் பேசுகிறாய்?"

"அர்த்த மில்லாதவன்தான் இந்த ஐயப்பன்!"

"ஆமாம், ஆமாம்-அது உண்மைதான்!"

"எது உண்மை! ஏ கிழவா! என்சேதி தெரியுமில்லே உமக்கு?"

மாயாண்டிக் கிழவருக்கு சந்தேகமும் திகிலும் பிறந்து விட்டது. தன்னிடம் மரியாதையாகவும், பரிவோடும் நடந்து கொள்ளும் ஐயப்பன் திடீரென்று மாறியிருப்பதற்குக் காரணத்தை அவர் புரிந்து கொண்டார். தன் மடியிலே பத்திரமாக இருக்கும் அந்தத் தாள் உரைக்கும், சிறுமுடிச்சுக்கும் ஐயப்பன் அடிபோட்டு விட்டான்-என்பதையும் அவர் தெரிந்து கொண்டார்.

அநாவசியமாக ஐயப்பனிடம் கொல்லர் வீட்டுப் பழைய கதையை ஏன் பேசினேம்; பேசியதோடு விடவில்லை; முழு விபரங்களும் இந்த முரடனிடம் ஏன் கூறினேம்; என்றெல்லாம் அவர் தனக்குத் தானே நொந்து கொண்டார் இலங்கை போய் சேரும்வரையில் எப்படியும் அவனிடமிருந்து தன் ரகசியத்தைக் காப்பாற்றிக் கொண்டால், அதன் பிறகு கவலையில்லையென்று முதலில் நினைத்திருந்தார். இப்போது ஐயப்பனின் நடவடிக்கைகளையும், பேச்சுத் தோரணைகளையும் பார்த்தால் இலங்கை போன பிறகும் அவன் தன்னை விடமாட்டான் போலிருக்கிறது என்று அஞ்சினர்.

காற்றில் தடுமாறும் தோணியைக்கூட கஷ்டப்பட்டு, செல்ல வேண்டிய திசைக்குத் திருப்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மாயாண்டிக் கிழவர் தன் மன அலைகளை அடக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார். அவரது முகமாற்றங்களை நிலவு வெளிச்சத்தில் கொஞ்சம், கொஞ்சம் பார்க்க முடிந்த ஐயப்பன், தன் உதட்டை கடித்துக்கொண்டு ஏதோ ஒரு பெரிய காரியம் செய்வதற்குத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டான். ஆட்கள் எல்லாம் மிகப் பரபரப்புடன் தங்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர், ஐயப்பன் மட்டும் தோணியின் நடுவேயுள்ள பாய்மரத்தின் மீது சாய்ந்து நின்று கொண்டு, மாயாண்டிக் கிழவரையே பார்த்துக் கொண்டிருந்தான். தன்னிடமுள்ள ஒரு பொருளைப் பறிக்க எதிரே ஒருவன் நிற்கிறன் என்ற எண்ணம் வந்துவிட்டபோது நம்மையறியாமலே நம் கை அந்தப் பொருளைத் தொட்டுப் பார்த்து அதை ஜாக்கிரதைப் படுத்துவது இயற்கைதான். அதேபோல மாயாண்டிக் கிழவரும் தன் மடியை தொட்டுத் தொட்டுத்துப் பார்த்துக் கொண்டார்.

'ஓய்மாயாண்டி!" என்று பயங்கரமாக கூச்சலிட்டான் ஐயப்பன்.

கிழவர், அமைதியாக அவனிடம் பேசினர். "ஐயப்பா! ஏனிப்படி திடீரென மாறிநிற்கிறாய்? நாமெல்லாம் எப்படிப் பழகியிருக்கிறோம் — இப்போதென்ன உனக்கு வந்தது?"

"பழகியவனைத்தானய்யா நீ ஏமாத்துறீர்? போனுப் போகுதுன்னு உம்மை தோணியிலே ஏத்தி வந்தா, நீரு நமக்கிட்டேயே உம்ம ஏமாத்து வேலையை காட்டுறீயே!"

"என்னப்பா ஏமாற்றினேன்?"

"மடியிலேயிருக்கிறது என்னன்னு சொன்னு, உன் தலையா வெடிச்சு போய்டும்! அதைச் சொன்னு என்ன?"

"அது உனக்குத் தேவையில்லாத சங்கதி; அதனுல் சொல்லவில்லை!"

"சீ! பொய்க்குளி கிழவா! புடிடா இவனை!" என்று கிழவர் மீது பாய்ந்தான் ஐயப்பன், கிழவருக்குப்பின்னே இருந்த இன்னொரு ஆளும் ஐயப்பன் சொற்படி கிழவர்மீது பாய்ந்து அவர் கைகளைப் பின் புறமாகக் கட்டிக் கொண்டான். கிழவர் திமிறினர், நடுக்கடலிலே அந்த தள்ளாத கிழவர் அத்தனை பேரை எப்படி எதிர்க்க முடியும்! இருந்தாலும் ஆவேசமும், முரட்டுத் தைரியமும் தலையெடுத்த காரணத்தால் கிழவர் தன்காலின் பலங்கொண்ட மட்டும் ஐயப்பனை உதைத்தார். அவன் கீழே விழுந்துவிடாமல் சமாளித்துக்கொண்டு நின்றன், பின்னல் கைகளைப் பிடித்துக் கட்டிக் கொண்டவனிடமிருந்து விடுபட்டு தோணியின் வேறுபக்கம் பாய்ந்தார். "ஏய் விடாதே!" என்று ஐயப்பன் பயங்கரமாகக் கத்தினன், எதிர்த்த மூலையில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்களும் கிழவரை மடக்கிக் கொண்டனர், ஆட்கள் அங்குமிங்கும் ஓடியதாலும், கிழவர் ஆவேசமாகத் துள்ளிக்கொண்டிருந்ததாலும் படகு வேகமாக ஆட ஆரம்பித்தது. கவிழ்ந்து விடுமோ என்று நினைக்கிற அளவுக்கு அந்தத் தோணி கடலிலே தத்தளித்தது. கிழவரோ இனி எதுவும் செய்ய முடியாது என்ற முடிவுக்கு வந்து விட்டார். கடலில் விழுந்தால் மட்டுமே தன் எண்ணம் நிறைவேறும்; இல்லையேல் பல நாளாய்ப்பாதுகாத்துவரும் அந்தப்பொருள்கள் இந்தப் பாதகர் வசம் சிக்கிவிடும் என்று தீர்மானம் செய்து கொண்டார். ஆகவே; எதிரே ஆட்கள் மடக்கியதும் ஒரே பாய்ச்சலாக கடல்நோக்கிப் பாய்ந்தார். ஆனல் அவர் கடலில் விழுந்து விட ஐயப்பன் விடவில்லை. தடுத்துப் பிடித்துக் கொண்டான். எல்லோரும் சூழ்ந்து விடவே கிழவர், வசமாக சிக்கிக்கொண்டு விழித்தார். ஐயப்பன் அவரது மடியை அவிழ்த்து தாள் உரையை எடுத்துக் கொண்டு, வேட்டியில் முடிந்திருந்த முடிச்சையும் அவிழ்த்துப் பார்த்தான், அதில் ஒரு சிறிய கல் இருந்தது அதையும் எடுத்துக் கொண்டான். தாள் உரையிலே இருப்பது என்ன என்று பார்ப்பதற்காக பக்கத்திலிருந்தவனை தீக்குச்சியை கொளுத்தச் சொன்னன். தீக்குச்சியின் வெளிச்சத்திலே, மாயாண்டிக் கிழவர் கண்ணீர் விடுவது நன்ருகத் தெரிந்தது! கொளுத்திய குச்சி முழுவதையும் அவர் முகத்தைப் பார்த்து ரசிப்பதற்கே செலவிட்டான் ஐயப்பன்.

"ஒருதாள் உரை-ஒரு கல்லு! இதை இழப்பதற்கு இந்தக் கிழவன் இப்படி அழுவானேன்?" என்ற கேள்வி ஐயப்பனை அதிக குழப்பத்திற்கு ஆளாக்கியது-மீண்டும் ஒரு குச்சியைக் கிழிக்கச் சொல்லி, அந்த ஒளியில் தாள் உரையைப் பிரித்துப் பார்த்தான்-அதில்குறுக்கும் நெடுக்குமாக கோடுகள் போட்ட ஒரு செப்பேடு சிறிய அளவில் இருந்தது. கிணறு போல ஒரு வட்டம்-மரம் போல ஒரு குறிப்பு-இன்னும் ஏதோ உருவங்கள்-அந்த செப்பேட்டில் எழுதப்பட்டிருந்தன. ஐயப்பனுக்குகிழவர் சொன்னகதையில் காணுமற்போன "செப்பேடும், சிறிய கல்லும் ஞாபகத்திற்கு வந்தன. செப்பேட்டில் காணப்படும் இடத்தில் அந்த சிறு கல்லைக் கொண்டு போய் வைத்தால், அந்தக்கல், புதையல் இருக்குமிடத்தைக் காட்டிவிடும் என்று கிழவர் சொன்ன கதையின் முடிவுரை ஐயப்பனை இப்போது மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அந்த மகிழ்ச்சி மின்னிய அந்த இமைப்போதில் ஐயப்பன் கண்ட கனவு எவ்வளவு மகத்தானது! செப்பேட்டுக் குறிப்பின்படி கல்லைக் கொண்டு போய் தரையில் வைக்கிறன். அந்தக் கல் காந்தம் போல் இழுக்கப்பட்டு ஓடுகிறது அது நிற்கிற இடத்தில் தோண்டிப் பார்க்கிறன். இரும்பைத் தங்கமாக்கும் குளிசக் கல்லும்; குடங்குடமாக தங்கத் துகள்களும்கிடைக்கின்றன -பிறகு! வைர மிழைத்த கட்டிலிலே ஐயப்பன் வைப்பாட்டி

ார் புடைசூழ சயனித்திருக்கிறன். 'ஐயப்பா' ன்ற பெயரால் பல கப்பல்ள் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டும், ஏற்றுமதி இறக்குதிப் பொருள்களை ஏற்றிக்கொண்டும் உலகெலாம் வியாத்திருக்கும் சமுத்திரத்திலே யணம் நடத்துகின்றன.

இப்படி ஆனந்தமான கனவு ஒருக்கணம் தோன்றி மறைந்து ஐயப்பனுக்கு ! அந்த செப்பேட்டையும் சிறிய கல்லையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான், அப்போது தோணியிலே யிருந்த ஆட்களில் ஒருவன் "அய்யோ அய்யோ ஆபத்து !" என்று கத்தினன். அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பினர்கள். 'பளீச்' என்று ஒரு ஒளிக்கதிர் அந்த தோணியிலே பட்டது ! ஐயப்பன், "அட கடவுளே!" என்று அலறிவிட்டான். அந்த வெளிச்சம் ஐயப்பன் கண்ணிலே பட்ட காரணத்தால் சில விநாடிகள் அவனால் சரியாக எதையும் பார்க்க முடியவில்லை.

"போலீஸ்தான் ! போலீஸ்தான் !!" என்று கத்தினன் ஒருவன்.

"போச்சு ! போச்சு !" என்று அலறினன் இன்னொருவன்.

"தோணியைத் திருப்பி காற்றுவாக்கிலே வேகமா விடுங்கடா, தடிப்பசங்களா !" என்று விகாரக் குரலில் கூச்சலிட்டான் ஐயப்பன்.

"கிட்ட வந்துவிட்டார்கள்" என்றன் ஒரு தொடை நடுங்கி.

"சீ! முட்டக்கூட வருவார்கள் — முழு முட்டாளே ! தள்ளுங்கடா சீக்கிரம் — உம், பாயை மாத்தி கட்டுடா; பரதேசிப்பயலே ! சோத்து நாய்களுக்கு சுறுசுறுப்பே கிடையாது!" என்று குலைத்தான் ஐயப்பன். தோணி, காற்றுவாக்கில் திருப்பப்பட்டு வேகமாக ஓடியது — வெங்காய மூட்டைகள் எல்லாம் ஒவ்வொன்றாக கடலிலே வீசி யெறியப்பட்டன, ஆனாலும் முழுவதும் கடலுக்குள் போய்ச் சேர முடியவில்லை, ஒவ்வொரு மூட்டையையும் நிதானமாக எடுத்து கடலுக்குள்ளே வீசுவதென்றால் சாதாரணமாக இருக்கிறதா? ஐயப்பனின் தேகம் பதறியது. மாயாண்டிக் கிழவருக்கு உலகமே சுற்றுவது போல் தெரிந்தது அவர் எதுவும் பேசவில்லை. வெங்காய மூட்டைகள் கடலுக்குள்ளே போய் யாருக்கும் பயனில்லாது போவது போலவே தன்னுடைய ரகசியப் பொருள்களும் யாருக்கும் பயனில்லாமல் போகப்போகிறது என்று எண்ணிக் கண்ணீர்வடித்தார் அவர். ஏறத்தாழ படகு காலி செய்யப்பட்டுவிட்டது. இனிமேல், "மீன் பிடிக்க வந்தோம்" என்றுகூறி தப்பித்துக்கொள்ள ஒரு சாக்கு இருக்கிறது என நினைத்து ஆறுதலாக ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான். எவ்வளவுதான் ஐயப்பனின் படகு வேகமாகப் போனாலும் பின்னே துரத்தும் போலீஸ்காரர் படகிடமிருந்து தப்பிவிட முடியவில்லை. "பட், பட்" என்று துப்பாக்கி ஒலியும் கேட்க ஆரம்பித்தது! ஐயப்பன் ஆட்கள் நடுங்கிப் போய் அசைவற்று நின்றுவிட்டனர்.

கருணாநிதி

படகு மட்டும் காற்று வாக்கிலே-அதாவது மீண்டும் "மனோரா" இருக்கும் திக்கு நோக்கி போய்க் கொண்டிருந்தது. ஆட்களின் துரிதமில்லாமல் படகு எவ்வளவு நேரம் காற்றின் உதவியால் மட்டும் செல்ல முடியும்! போலீஸ்காரர்கள் வந்த தோணி மிகவும் அருகே வந்துவிட்டது. ஆட்கள் எல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து ஐயப்பன், தன் பயத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "பயப்படாதிங்க போலீஸ்காரனுகிட்ட உளராதிங்க—எல்லாரும் ஒண்ணு போல, மீன் பிடிக்க வந்ததா சொல்லுங்க!" என்று கூறினன்,

அப்போது மாயாண்டிக் கிழவர், 'ஐயப்பா! ஜாக்கிரதை, கள்ளத்தோணி வியாபாரம் செய்யத்தான் வந்தோம் என்று நான் சொல்லப் போகிறேன்' என்று கர்ச்சித்தார்.

"என்னடா கிழவா?"

"ஆமாம் - மரியாதையாக அந்த செப்பேட்டையும் கல்லையும் கொடுத்துவிடு-இல்லாவிட்டால் எல்லோரையும் நானே காட்டிக்கொடுத்து விடுவேன்" என்று உறுமினர் மாயாண்டி.

"என்ன சொன்னய்-காட்டிக் கொடுப்பியா? கிழநாயே!-உன்னை உயிரோட கடல்லே மிதக்க விடுறேன் பாரு!—" என்று சப்தமிட்டு கொண்டே, ஐயப்பன் கிழவனைத் தூக்கி கடலில் வீசப்போனன். அந்த நேரத்தில் போலீஸ்காரர்கள் அடித்த வெளிச்சம் ஐயப்பனின் கண்ணில் மின்னல் போலப்பட்டு, கண்களைத் திறக்க முடியாமல் செய்துவிட்டது. அதே சமயத்தில் பல குண்டுகள் பட படவென வெடித்தன.

அதிர்ச்சி அடைந்த ஐயப்பன் தோணிக்குள்ளேயே கிழவனைப் போட்டுவிட்டு, தன்னிடமிருந்த செப்பேட்டையும் கல்லையும் கிழவனிடமே கொடுத்து "கிழவா! கிழவா! எங்களைக் காட்டிக் கொடுத்துவிடாதே!" என்று கெஞ்சினன்.

மாயாண்டி சிறுகல்லையும் செப்பேட்டையும், உள் மடியிலே வைத்து பத்திரப்படுத்திக் கொண்டு, தோணியிலிருந்தபடியே திடீரெனக் கடலில் குதித்துவிட்டார்,

போலீஸ்காரர் சோதனைக்கு ஆளாகி அந்தக் கல்லும் செப்பேடும் பறி போவதைவிட தானும் அந்தப் பொருள்களும் கடலிலே மறைந்து அழிந்துவிடலாம் என்று அவர் முடிவிலே விழுந்து விட்டார். அவர் கடலிலேவிழுந்ததற்கும், போலீஸ்காரர்கள் ஐயப்பன் படகை ஆக்ரமிப்பதற்கும் சரியாக இருந்தது. போலீஸ் அதிகாரிகளில் கம்பீரமான ஒரு உத்தியோகஸ்தர், அழகான இளந்தாடி உடையவர் — மாயாண்டிக் கிழவர் கடலிலே குதித்ததைக் கண்டு, அவரைத் தொடர்ந்து தானும் குதித்துவிட்டார். கொந்தளித்துக் குமுறும் அலைகளினுடனே அந்த இளந்தாடி உத்தியோகஸ்தர்மிகவும் சிரமப்பட்டு நீந்தினர். சிறிது நேரம் அவர்கள் இருவரும் குதித்த இடத்திலே அமைதி நிலவியது. இனி இருவருமே திரும்பி வரமாட்டார்கள் என்ற முடிவு கட்டிக் கொள்ள வேண்டிய நிலை பிறந்தது. ஐயப்பன் உட்பட அனைவருக்கும் போலீஸ்காரர்கள் கைகளிலே விலங்குபூட்டி விட்டார்கள், அதுவரையிலே கடலில் விழுந்த இருவரையும் காணவில்லை. போலீஸ் படகிலிருந்து பெரிய டார்ச் லைட் கடல்நோக்கிஅடிக்கப்பட்டது, அந்த வட்ட வடிவ வெளிச்சத்திலே, ஒரு கொத்து தாடி மட்டும் மிதந்தது. அதை ஐயப்பன் கோஷ்டியார் யாரும் பார்க்கவில்லை. போலீசார் மட்டுமே பார்த்தார்கள். உடனே வெளிச்சத்தை வேறுபக்கம் திருப்பினர்கள். கிழவரின் உடலைத் தூக்கிக் கொண்டு, போலீஸ்

(10-ம் பக்கம்)

காதலோவியம்

சாந்த குமாரி.

★

அவளோர் சித்திரப்பாவை. உரித்தெடுத்த அல்லித் தண்டின் நிறம் பெற்ற உருக்குலையா மங்கை. அவள் ஒளி முகம் ஓராயிரம் நிலவுகளை ஒன்றாக அடுக்கிவைத்துக் கற்பனை செய்து போட்டி போட்டுப் பார்த்தாலும் எதிர் நிற்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. அத்தகைய—அழகின் வடித் தெடுத்த கூட்டு அவள்! காணக் கிடைக்காததங்கம். தேடக் கிடைக்காத வைரம். களிப்பிலாடும் மயில்—காதாரப் பண்பாடும் குயில்! நடக்கும் பொன்வண்டு ! நடனமிடும் நட்சத்திரம்!

அவள் அன்னத்தூவி பரப்பிய மஞ்சத்திலே ஆனந்த நித்திரை செய்து கொண்டிருக்கிறள். தூங்கும் அந்தத் தோகையாளின் துடியிடை நெளிவதேன் ? தூய்மை நிறை அவள் செவ்விதழ்களிலே அமுதம் நிறைவதேன் ? மின்னித் தேங்கும் அந்த அமுதத்தை அவளது அரும்பு இதழ்கள் அவளையுமறியாமல் சுவை பார்ப்பதேன் ? ஆகா—ரத்தினத்தின் நிறம் பழிக்கும் விதத்திலே அவள் கன்னங்கள் மாறுகின்றனவே; அது ஏன் ? எத்தகைய மந்தகாசமான புன்னகை ! முல்லைச் சிரிப்பா ? முழு நிலாத் தோற்றமா ? எல்லையிலா மகிழ்ச்சியின் கோடுகள் அவள் வதனமெங்கும் அழகுக் கோலங்கள் போடுகின்றனவே !

இதற்குக் காரணம் யாரைக் கேட்பது? வள்ளுவரைத் தான் கேட்க வேண்டும்.

"அய்யா வள்ளுவப் பெருந்தகையீர் ! என்ன காரணம் இதற்கு ?"

"தம்பி ! அவளே — அதோ எழுந்து விட்டாள் — அவளையே கேள் !"

இப்போது அவள் தனக்குத் தானே பேசிக் கொள்கிறள். அது நம் காதில் விழுகிறது—கேளுங்கள் !

"கனவிலே வந்து என்னை என் காதலர் கூடினர். இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி ஆனந்தம் பெற்றேன். என்னை விட்டு நீங்காமல் கனவிலே கூடியிருந்த என் காதல் தேவனை, நனவு என்று சொல்லப்படுகிற ஒரு கொடியவன் ஓடிவந்து பிரித்து விட்டானே !"

காரிகை கதறுகிறள். நனவைத் திட்டுகிறள்.

காதலனோடிருப்பதாக கனவு கண்டாளாம். விழித்துக் கொண்டாளாம். அதற்காக வருந்துகிறள். அந்த சோகத்தை வள்ளுவர் நடையிலே கேட்டு இன்பம் பெறுங்கள் —இதோ !

"நனவென ஒன்றில்லையாயின் கனவினற்
காதலர் நீங்கலர் மன."

விபீஷணருக்கு ...

2-ம் பக்க தொடர்ச்சி

ஆண்டு கொண்டிருந்தானே ராமன் அவர் இல்வாழ்க்கைப் பண்பின் இலக்கணமாம்! காட்டிலே, லவன் என்ற மகனைப் பெற்று, பிறகு குசன் என்ற மகனையும் ரிஷி அருளால்பெற்று கணவனிடம் சென்று வாழ நினைக்காமல் காட்டிலேயே காலங் கழித்தவள்-மாதர் வாழ்வில் புரட்சிகரமான மாற்றத்தைச் செய்த புனிதவதியாம்! புலம்புகிறார் சிவஞானம்; விபீஷண போதை தலைக்கேறி விட்ட காரணத்தால்!

தம்பி இலக்குமணன், அழகு மனைவி ஊர்மிளாவை அரண்மனையிலே விட்டுவிட்டு, கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரியாக காட்டிலே வாழ்ந்து அண்ணன் அண்ணி படுத்திருக்கும் போது காவலும் காத்து நின்றானாம்! அதைப் பற்றி ராமனோ சீதையோ கவலைப்பட்டிருந்தால் இலக்குவன் காவல் காத்திருக்க, அவர்கள் களிப்பில் ஆடவும், கண் அயரவும் மனம் வந்திருக்குமா? இல்வாழ்வின் பண்பாம் இது! இளித்த வாயனும் ஏற்க முடியாத இலக்கணம்! பாதகப் பண்பு! சிவஞானத்தின் வாதம் சரிதானா என்று ஆச்சாரியாரையே கேட்போம்!

“ஏகபத்தினி விரதத்தை போதிக்கவே ராமாயணம் எழுபட்டது என்று சிவஞானம் கூறுகிறாரே; அப்படியானால் ஆச்சாரியாரே! ராமனை விஷ்ணு அவதாரமென்கிறீர்கள் நீங்கள்! அந்த விஷ்ணு உலகத்திற்கு ஏக பத்தினி விரதத்தை போதிக்கப் புறப்பட்டது உண்மை என்றால், அதற்காகவே ராமாவதாரம்எடுத்தார் என்பது சரி என்றால், அதே விஷ்ணு, பூதேவி, ஸ்ரீதேவி என்ற இருவரைத் தழுவுவானேன்? அந்த விஷ்ணுஎடுத்த கிருஷ்ணவதாரத்திலே அளவில்லா கோபிகைகளுடன் குலவுவானேன்? பாமா, ருக்மணி, ராதா, முதலியோரின் ஆசை நாயகனாக இருப்பானேன்?” இப்படியெல்லாம் ஆச்சாரியாரை நோக்கி கேள்விகள் எழுவதற்குதான் சிவஞானத்தின் கட்டுரை பயன்படும். ராமாயணத்தின் மூலம், கற்பு சமமாக்கப்பட்டு ஏகபத்தினி விரதம் பாதுகாக்கப்படுகிறது என்று வாதாடுகிற சிவஞானம்·

பாரதத்தின் மூலம்—ஐவருக்கும் தேவியாக இருந்தவளின் வரலாறு மூலம்—என்ன பாடம் உலகுக்கு போதிக்கப்படுகிறது என்றுகூறுவாரோ,யார்கண்டது? இருதார மணம் புரிந்துகொண்ட குமரக் கடவுளின் கதை மூலம் என்ன பாடம் கிடைக்குமென்று கூறுவாரோ தெரியவில்லையே! இந்திரன் என்று தெரிந்தும் அவனோடு கூடி நின்றாள் அகலிகை என்று ஆச்சாரியார் எழுதியிருக்கிறார்— வால்மீகியும் எழுதியிருக்கிறார். அந்தத் தவறுடைய தவ முனிவன் பத்தினியை சாப விமோசனம் செய்து வணங்கி நின்றான் ராமன்—என்கிறதே ராமாயணம்; அந்த ராமாயணமா கற்பு நிலையைப் போதிக்கும் ராமனைக் கதாநாயகனாக கொண்டது என்று கூறுகிறார் சிவஞானம்!

அந்தோ! அந்தோ! வெட்கம் வெட்கம்!

“ராமன் வடநாட்டான்; ஆகவே தமிழ் நாட்டார் அவனை வழிபடக் கூடாது என்று வம்பு பேசுவது நிறவெறிப் பேயாட்டமே யன்றி அறிவு வழிப் போராட்டமன்று.”

இந்தப் பொன்னான (?) கருத்தையும் வீசியிருப்பவர் தோழர் சிவஞானம்தான்! மனிதன் தெய்வீக சக்தி பெற்று வழிபடுதற்குரியவனாகிறான் - அப்படி ஆனவன் ராமன்-அவன் வடநாட்டானாயிருந்தால் என்ன? வணங்குவதில் என்ன தவறு?

இப்படிக் கேட்கிறார் சிவஞானம். பொட்டி ஸ்ரீராமுலு தெலுங்கு நாட்டவர் என்பதற்காக அவர் தியாகத்திற்குத் தரவேண்டிய மதிப்பைத்தர மறுக்கும் சிவஞானம், நம்மைப் பார்த்து “நிற வெறிப் போயட்டம்” ஆடுகிறோம் என்கிறார்! நல்லவேளை, இதன் மூலமாவது, வேறு வேறு “நிறங்கள்” என்ற உண்மையை ஒத்துக் கொள்கிறாரே!

வடநாட்டு ராமனை வணங்கினால் என்ன என்று கோபத்தோடு கேட்கும் சிவஞானம், தெய்வமாகப் போற்றப்படும் கண்ணகியை வணங்கும் வடநாட்டார் யாருமில்லை என்பதை வெட்கத்தோடு ஒத்துக் கொள்வாரா? கண்ணகியின் புகழ் தமிழகத்திலேயே சரியாகப் பரவ முடியாதபடி-ஆரிய சீதை அடியெடுத்து வைத்துவிட்டாள் என்பதை சிவஞானங்கள் மறுக்க முடியுமா?

வடநாட்டு ராமனை வணங்க மறுப்பது நிறவெறி என்கிற சிவஞானம், மேல்நாட்டு அப்போலா, அர்குலிஸ், போன்ற தேவதைகளை நிறவெறியின்றி வணங்கத் தயார்தானா?

கடைசியாக, சிவஞானம், ராமனைக் கடவுளாக்கியது கம்பரல்ல-முதலில் சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் கூட ராமனைக் கடவுளெனக் குறித்திருக்கிறார் என்கிறார்.

யார் முதலில் சொன்னால் என்ன; ராமன் கடவுள் அல்ல; ராமாயணம் பண்புள்ள காவியம் அல்ல-அதை நம்பி மக்கள் தங்கள் மதியை இழக்கக்கூடாது என்பதுதான் அறிவுடையோர் வாதம்!

இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் சிவஞானங்கள்! இளங்கோவடிகள் ராமனைப் பற்றி குறிப்பிடும் முறையும், கம்பர் குறிப்பிடும் முறையும் வேறு வேறானவை!

கம்பர், தானே ஆழ்வாராக மாறி ராமக்கடவுளைத் தொழுது பாடுகிறார். இளங்கோவடிகளோ, அந்தக் காலத்து மக்கள் உள்ளத்தை, [illegible]ழ்க்கை நிலையை நம்பிக்கைகளை, ஆய்ச்சியர் பாடும் குரவைப்பாட்டு மூலமாகச் சொல்லுகிறார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பாடுவதற்கு முன்பே ராமகாதை இருந்திருக்கிறது-ஆனால் அவர் கம்பரைப் போல ராமாயணம் எழுத எண்ணவில்லை; கண்ணகி என்ற தமிழச்சியின் மாண்புக்கோர் நூல் யாத்திருக்கிறார். கம்பரோ, தமிழகத்து சரித்திரக் காதை எதுவும் கிடைக்காதவர் போல வடமொழி வால்மீகி நூலுக்கு தமிழ் மெருகு கொடுத்துப்பழி தேடிக் கொண்டிருக்கிறார், ராமனைக் கடவுளாக்கித் தொழுததின் மூலம்!

தமிழகத்து வரலாறு எதையும் எழுத வால்மீகி ஆசைப்பட்டாரில்லை! ஆனால் கம்பரோ வடநாட்டு சரிதை எழுதியிருக்கிறார்!

“ஏகபத்தினி விரதம்” என்ற கொள்கை வலியுறுத்தப்பட, கற்பு இலக்கணம் சொல்லப்பட சிலப்பதிகாரத்தைவிட ராமாயணம் தகுதி வாய்ந்தது என்று சிவஞானங்கள் கருதுகிறார்கள். இது வடநாட்டுக்கு காவடி தூக்கும் பரம்பரைப் பழக்கத்தின் பாற்பட்ட கருத்து! இராவணன் காலத்திலே கிளம்பிய விபீஷணக் கொள்கை! இந்தக் கொள்கை என்று ஒழியுமா? எப்போது நாடு நலம் பெறுமோ?

ராமபக்தர்கள் தெளிவு பெறுவது வெறுங்கனவு தானோ? காலந்தான் பதில் கூறவேண்டும்!

பரிதாபக் கொலைகள்
புதுமையான முறையில்
வெளிவரும்
துப்பறியும் நவீனம்
விலை அணா 4
பிரதி 1-க்கு 8-அணா வீதம் முன் பணம் 15-10-54-க்குள் கட்டக் கூடிய ஏஜண்டுகள் மட்டும் எழுதவும். முதல்இதழ் 25-10-54 அன்று வெளிவருகிறது.
தமிழன் புக் ஹவுஸ்
20, வெங்கடேசநாய்க்கன் தெரு
சென்னை-5

கொள்கை வளருது கோபுரம் போலே!

கோம்பை
தேதி: 8—10—54
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

கும்மிடிப் பூண்டி
தேதி : 9—10—54
பேசுவோர்:
தோழியர் அருண்மொழி
முகவை ஆர்.எஸ். பாண்டியன்
எஸ். எஸ். தென்னரசு.
சொர்ணம்.

சென்னை
[மீர்சாகிப் பேட்டை]
தேதி 10—10—54
பேசுவோர்
மு. கருணாநிதி
முகவை ஆர்.எஸ். பாண்டியன்
இளம்பரிதி.
வி. கன்னியப்பன்

கொல்லக் கோம்பை
தேதி : 15—10—54
பேசுபவர்
கண்ணதாசன்.

பொள்ளாச்சி
தேதி : 16—10—54
பேசுபவர்
கண்ணதாசன்.

திருப்பூர்
தேதி : 17—10—54
பேசுபவர்
கண்ணதாசன்.

குடந்தை
தேதி : 17—10—54
பேசுவோர்
மு. கருணாநிதி,
எஸ்.எஸ். ராஜேந்திரன்
டி. வி. நாராயணசாமி.

விற்பனையாகிறது!
மு. கருணாநிதி தீட்டிய
அம்மையப்பன்
[கதை வசனப் புத்தகம்]
*
உரிமை பதிவு செய்யப்பட்டது.
அழகான முகப்புடன் விலை எட்டணா
கழிவு 40 சத விகிதம்.
முரசொலி ஏஜெண்டுகள் கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும்; அல்லது வி. பி. மூலம்தான் அனுப்ப இயலும்.
— வெளியீடு —
முத்தாரம் பதிப்பகம்
சென்னை-14,



அன்பின் அடையாளம்!

"ஒரு நல்ல செய்தி அண்ணு! எங்கள் பள்ளியில் குறள் போட்டி நடத்திஞர்கள் அதில் முதல் பரிசு பெற்றது நான்தான்" என்று பூரிப்போடு—மகிழ்ச்சியோடு கடிதம் எழுதியிருக்கிறது ஜோதி என்ற தங்கை.

குறள், தங்கைக்குப் பரிசு தந்திருக்கிறது! ஏன்? குறளே உலகத்துக்கு ஒரு பரிசு! உண்மைதான்; குறள் உலகத்தின் குரல்!

குறள் ஒவ்வொன்றும் ஒரு சொத்து; முத்துக்குச் சமமானது! இரண்டே வரிகளைக் கொண்ட ஒவ்வொரு குறளையும் வைத்து ஒரு கதையே எழுதலாம்.

அப்படிப் பட்ட ஒரு கதைதான் கீழே இருப்பது; படியுங்களேன்:

ஃ ஃ ஃ

அருமையான மாளிகை. அதில் ஒரு அழகான கூடம் அங்கே ஒரு பெரியவர்; அந்த வீட்டுக்காரர்.

கூண்டில் அடைபட்டசிங்கம் என்பார்களே, தெரியுமா? அதைப் போலத்தான் அவர் அலைந்து கொண்டிருந்தார். சிவந்த முகம்—கோபக் கண்கள் ஆத்திர நடை! அப்பப்பா! அவருக்கு ஏன் இவ்வளவு கோபம்?

அவர் கண்கள் அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்தன. மணி ஒன்பது! காலையல்ல; இரவு! மணியைப் பார்க்கப் பார்க்க அவர் கோபம் இன்னும் அதிகமாகியது. ஏன்? பள்ளிக்கூடம் சென்ற அவரது செல்வ மகன் இன்னும் வீடு திரும்பவில்லை. வேடிக்கைதான்; எல்லா அப்பாக்களுக்கும் பயம்தானே தோன்றும்; ஆனல், இவருக்கோ கோபம் உண்டாகிவிட்டது! அத்தகைய முன் கோபக்காரர் அவர்!

சற்றுநேரம் சென்றது. கதவு திறந்தது. உள்ளே நுழைந்தான் ஒருவன். வேறுயாருமல்ல; அவரது மகன் தான்! மகனைக் கண்டதும் அப்பாவின் ஆத்திரம் அதிகமாகியது. "டேய் முரளி! எங்கே போயிருந்தாய் இத்தனை நேரம்?...ம்...எங்கே போயிருந்தாய்?" என்று எடுத்தவுடனேயே இரைந்தார்.

இதை எதிர்பார்க்கவேயில்லை முரளி. பயந்தான். நடுங்கினன்.

"சொல்லடா கழுதை!" — அப்பா சீறினர்.

முரளி வாயைத் திறந்தான். நாக்கு பேச மறுத்தது. "இல்லையப்பா.........நம்ம கந்தனுக்கு உடம்பு சரியில்லை ... அவனை ஆஸ்பத்திரிக்கு ... அழைச்சுக்கிட்டு...' அவன் உளறினன்.

"என்ன? கந்தனு? அவனுடன் சேராதே சேராதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்?" அப்பா உண்மையாகவே சிங்கமாகிவிட்டார். மறுகணம் ஆத்திரம் அடிகளாகியது.-முரளி துடித்தான்.

"இல்லையப்பா! அவனுக்கு ஒரே ஜுரம்பா! சாகக் கிடந்தான்..."

"செத்தால் உனக்கென்னடா? உன் அண்ணனு? தம்பியா?...அந்த தோட்டக்காரப் பயலுடன் நீ கொஞ்சுவது பிடிக்கவில்லை என்றுதானே அவனை வேலையைவிட்டு விரட்டினேன்?...'

முரளியின் கண்களின் நீர் பெருகியது. தலைகுனிந்தபடி நின்ருன். "போடா உள்ளே!" என்று அப்பா இரைந்தார். முரளி தன் அறைக்குள்ளே சென்ருன்.

அவனுக்கு அழுகை வந்தது. அறை ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். கொஞ்ச தூரத்தில் ஒருஓட்டைக்குடிசை தெரிந்தது. 'ஐயோ!......அந்த ஓட்டைக் குடிசையில்தானே கந்தன் முணகிக் கொண்டு கிடப்பான்! பாவம்! டாக்டரும் மருந்து வாங்க பணம் கேட்கிருரே! என்னிடமும் தம்பிடி கூட இல்லையே! நான் என்ன செய்வேன்? அப்பாவும் அடிக்கிருரே! அனுதைக்கு இரங்கமாட்டாரே! கந்தன் சாகவேண்டியதுதானு? ஐயோ!'— இப்படி எண்ணினன். அந்த மாஜி தோட்டக்காரனுக்காக—தாய் தந்தையற்ற அனுதைச் சிறுவனுக்காக அந்த சீமான் மகன் துடித்தான்!

ஃ ஃ ஃ

நள்ளிரவு. ஒரு மணி இருக்கும். ஒரே இருட்டு.

முரளியின் மாளிகைக் கதவு, மெதுவாகத் திறந்தது. வெளியே வந்தது ஒரு உருவம். அதுவேறு யாருமல்ல; முரளி தான்! வெளியே வந்த அவன் வேகமாக நடக்க ஆரம்பித்தான் ஆனல் அவன் உணரவில்லை, அவனைத் தொடர்ந்து மற்றுமொரு உருவம் பின்னலேயே வீட்டிலிருந்து வருவதை!

முரளி நேராக ஓட்டைக் குடிசைக்குச் சென்ருன். உள்ளேயும் நுழைந்தான். அங்கே... ஒரு கிழிந்த பாய்; அதன் மேல் ஒரு எலும்பும் தோலுமான உடல்-அவன் தான் கந்தன்.

"கந்தா" என்ருன் முரளி. அந்தக் குரலிலே ஒரே துடிதுடிப்பு; பாசம்!

கந்தன் முணகினன், "யார்? முரளியா?...... ஐயையோ இந்த நேரத்தில் நீ ஏன் வந்தாய்? உன் அப்பா கோபிப்பாரே!" என்ருன் அந்தக் குரலில் ஒரே ஏக்கம்; நடுக்கம்!"

"கோபிப்பதோடு மட்டுமல்ல கந்தா! அடிக்கவும் செய்தார்! உனக்கு மருந்து வாங்க பணம் கேட்கலாம் என்றிருந்தேன் ... ஆனல் ..."—முரளி

[10-ம் பக்கம்]

முத்துவும் செல்வியும்

5. விறகுக்குப் பதிலாக...?

தசரா விடுமுறை வந்தது. முத்து-செல்வி இருவரின் பள்ளிக்கூடமும் மூடப்பட்டன. அன்றே அவர்களின் புத்தகப் பெட்டிகளும் மூடிக்கொண்டன. அப்புறமென்ன? இருவரும் வருடா வருடம் தவருது செய்வதைஇப்போதும் செய்தார்கள். அதாவது, விடுமுறைக்கு மறு நாளே அவர்கள் ஆரூரில் காட்சி யளித்தார்கள்.

ஆரூரில் அவர்களின் அத்தை வீடு இருக்கிறது. அங்கே அத்தை இருக்கிருர்கள்; அத்தையின் செல்ல மகன் செல்வம் இருக்கிருன். அந்தச் சுட்டியோ முத்துவுக்கும் செல்விக்கும் சரியான ஜோடி; கேட்க வேண்டுமா? எப்போதும் சிரிப்பு தான்—விளையாட்டுதான்!

இந்த முறை நிகழ்ந்த ஒரு சிரிப்பூட்டும் சம்பவத்தைக் கேளுங்களேன்.

அன்று செல்வம் தன் மேஜையில் எதையோ தேடிக் கொண்டிருந்தான், தேடியது கிடைப்பதாக இல்லை, ஆகவே கோபமும் வந்தது, கையில் கிடைத்தவை எல்லாம் படாத பாடுபட்டன. இந்த சமயம் பார்த்து சுதவிடம் வந்து எட்டிப் பார்த்தது செல்வி. "என்ன செல்வம் தேடுறே!" என்றும் கேட்டு வைத்தது மெதுவாக.

"என் ஸ்கேலைக் காணுமே, நீ பார்த்தியா, செல்வி?" என்று கேட்டான் செல்வம்.

"ஸ்கேலா? அப்படின்ன?"

"அப்படின்ன ... மரக்கட்டையால் செய்த ஒரு சட்டம்...இப்போ புரிந்ததா?"

"புரிந்தது; புரிந்தது: அடடா! அது உனக்கு தேவையில்லைன்னு நினைச்சுட்டனே"

"ஐயோ! அப்பன்ன என்ன செய்தே அதை?"

"விறகு வாங்கிப்போன வேலைக்காரி இன்னும் வரல்லே ...அத்தை அடுப்பெரிக்க ஒன்னு மில்லேன்னு சொன்னுங்க...இப்பத்தான் அதை அடுப்பிலே வச்சேன்" என்றது செல்வி.

"சரியாப் போச்சு போ" என்று அலுத்துக் கொண்டான் செல்வம். செல்வியோ கோபத்தை அடக்கி விட்ட பெருமையோடு அந்த இடத்தை விட்டு நகர்ந்தது.

"அடடா இப்போ வேறு ஒரு 'ஸ்கேல்' வாங்க வேண்டுமே" என்று முணுமுணுத்துக் கொண்டே நாற்காலியில் உட்கார்ந்தான் செல்வம். அதேசமயம் மேஜைக்கு அடியில் காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்தான். பார்த்தான். அங்கே ஒரு ஸ்கேல் காணமல் போன அதே ஸ்கேல்தான் கிடந்தது! செல்வம் அதை எடுத்தான். மறுகணம். அவனுக்கு திடீரென்று ஒரு சந்தேகம் தோன்றியது. "ஸ்கேல் தான் இருக்கிறதே, அப்படியானல் செல்வி அடுப்பில் வைத்தது எதை"—இதுதான் அந்த சந்தேகம் உடனே செல்வம் 'விருட்' என்று எழுந்தான். அடுப்பங்கரைக்கு ஓடினன். அடுப்புக்கு இரண்டு பக்கத்திலும் முத்துவும் செல்வியும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். செல்வம் அடுப்பைப் பார்த்தான். அங்கே எரிந்து கொண்டிருந்த பொருளைப் பார்த்தான். மறுகணம் "ஐயோ" என்று அலறி விட்டான். ஏன் தெரியுமா? அங்கே அடுப்பிலே 'திகு திகு' என்று, எரிந்து கொண்டிருந்தது செல்வத்தின் கண்ணுக்கு கண்ணுன—உயிருக்கு உயிரான கிரிக்கெட் மட்டை!

சோகச் சித்திரம் ..

[5-ம் பக்க தொடர்ச்சி]

நிழல்படம் போல இந்த நிகழ்ச்சி சம்பத்ராயின் பட்ட மகிஷியாகி விட்ட சாரந்தாவின் உள்ளத்திரையில் வந்து மறைந்தது. தன் கணவனின் உரத்த குரல்கேட்டு மீண்டும் நினைவு பெற்றாள்.

"சாரந்தா! ஏன் தயங்குகிறாய்? நீக்குளித்து பெருமை பெற்ற பந்துலா வம்சத்தில் பிறந்தவளா நீ? இந்த உடைவாளைக் கையி லேந்தி என் மானத்தைக் காப்பாற்று...உம்..."

"எப்படி மகாராஜா இந்த பாவ காரியத்தைச் செய்வேன் ?"

"எது சாரந்தா பாவகாரியம் ? ஏவலர் புடைசூழ இந்நாட்டைக் காவல்புரிந்த என்னை உயிரோடு உலவவிட்டு, பின்னர், உன் கணவனைகேவலம் பன்றியைப் போல ஔரங்கசீபின் முன்னே இழுத்துச் செல்லவைப்பது பாவ காரியமா—அல்லது அவமானம் போக்க சாவே வரினும் ஏற்றிடத் துடிக்கும் என் விருப்பத்தை நிறைவேற்றுவது பாவ காரியமா? இதில் எது சாரந்தா பாவ காரியம்?"

ஒருமுறை தலைதூக்கி நிமிர்ந்தாள், அவள்,

"நானும் செத்துவிட மாட்டேன், சாரந்தா! கணவனை அணைத்துக் கொண்டு ஓடி ஒளிகிறாயா, அல்லது ஒளி சிந்தும் வேல்தந்து அவனைக் களத்திற்கு அனுப்புகிறாயா என்பதைப் பார்க்கத்தான்

போகிறேன் !" — சீதலாவின் இந்த சொற்களை சாரந்தாவால் இன்னும் கேட்கமுடிந்தது. அந்த வீர மொழியெல்லாம் இப்போது எங்கே? எங்கே? என்று சீதலாவின் உருவம் கேட்பது — போலிருந்தது.

"அடி பேதைப் பெண்ணே! சொந்த அனுபவத்தைப் போல வேறு திறமையான ஆசான் இந்த உலகத்தில் கிடையாதடி" என்று மனச்சாட்சி கேலி பேசியது.

காவற்படையை வீழ்த்தி விட்ட மொகலாய சேனை, சம்பத்ராய் மீது பாய்ந்தது. அதற்குள், சாரந்தா வீசி எறிந்த வாள் அவன் இருதயத்துள் பாய்ந்து விட்டது. ஆ—என்ற முழக்கத்தோடு தலைசாய்த்தான், சம்பத்ராய் வீழ்ந்தது அவன் நெடு மேனி; வீழ்ந்தது அவன் கட்டிக் காத்த பந்துலா ராஜ்யம்!

எங்கும் இனிக்கும் இளங் கரும்பாய் சுவைதந்து — சோபிதம் சேர்த்த தன் கணவனின் நெஞ்சிலே சாரந்தா வாள் பாய்ச்சினாள்! தான் அணைத்து மகிழ்ந்த ஆணிப்பொன் மேனியை அவன் புழுதியில் தள்ளினாள்!

பொது வாழ்வு......

[11-ம் பக்க தொடர்ச்சி]

ஜின்னாவின் மறைவுக்குப்பின் மெய்வருந்தும் காட்சியை நாம் பார்க்கிறோம். இருக்கின்ற நிலையை 'சிரஞ்சீவி' என்று எண்ணி இறுதியில் குப்புறக் கவிழ்கிறவர்களுக்கு பாகிஸ்தான் மூலம் ஜின்னா ஒரு புதிய பாடத்தைப் போதித்துப் போய்விட்டார். பாகிஸ்தான் என்றால் என்ன என்று கேட்டவர்கள்தான் இந்த நேருப் பண்டிதரும் இன்ன பிறதலைவர்களும்.அவர்கள் தான்பாக்-பிரதமருக்கு விருந்தும் நடத்தி விழா கொண்டாடியிருக்கிறார்கள். நேற்று ஜின்னா — இன்று அன்னா! நேற்று பாகிஸ்தான் இன்று திராவிடம்!

புதையல்......

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

உத்தியோகஸ்தர் படகிடம் வந்துகொண்டிருந்தார். எல்லா போலிசாரும் உதட்டைப் பிதுக்கினார்கள். கிழவர் தீர்ந்து விட்டார் என்று அவர்களுடைய கண்கள் செய்தி தெரிவித்தன. போலீஸ் உத்தியோகஸ்தர் கிழவரின் உடலை படகிலே வைத்தார். தன்னுடைய இளந்தாடி கடலிலே போய்விட்டதை அந்த உத்தியோகஸ்தர் உணர்ந்தார். கிழவர் கண் விழிக்கவில்லை, அவர் மட்டும் கண் விழித்துப் பார்த்திருந்தால், அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தர், முதல் நாள் இரவு தான் சந்தித்த துரை தான் என்பதைத் தெரிந்து கொண்டிருப்பார்,

[வளரும்]

கருணாநிதி நிகழ்ச்சிகள்

10—10—54 மீர்சாகிப் பேட்டை சென்னை

17-10-54 கும்பகோணம்

24-10-54 சேத்துப்பட்டு (சென்னை)

31—10—54 சேலம்

பார்த்து நின்ற மொகலாய வீரர்கள் திடுக்கிட்டு நின்றார்கள். "ராணி சாஹிபா, உங்கள் உத்தரவுக்கு காத்து நிற்கிறோம்" என்று தொழுது வணங்கினார்கள்.

"வீரர்களே எங்கள் சுவத்தை ராணி சீதலா தேவியிடம் சேர்த்து விடுங்கள்" என்று சொல்லி, சாரந்தா வானத்தில் தூக்கி எறிந்த கட்டாரியின் முன்பு தன்மார்பைக் காட்டினாள்.

பிறைவான ...

[9-ம் பக்க தொடர்ச்சி]

பேச்சை முடிக்க வில்லை. விம்மினான்,

"எனக்காக உனக்கேன் தொல்லை முரளி? ... நீ போய் விடு"

',இல்லை கந்தா! உன்னிடம் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன். நாளைக்கு எப்படியும் மருந்து வாங்கி...',

"வேண்டாம் முரளி! உன் அப்பா காலணாகூட தரமாட்டார் என்று எனக்குத் தெரியும்...',

"அப்பா தராவிட்டால்என்ன? என்னிடம் இதோ, மோதிரம் இருக்கிறது; கடிகாரம் இருக்கிறது! ஒரு உயிரைக் காப்பாற்ற உபயோகப் படாமல் வேறு எதற்கு இவை எல்லாம்? ...காணாமல் போய்விட்டது என்று சொல்லி, என் கந்தனின் உயிரைக் காப்பேன்...'

கந்தன் இதற்கு சரியானபதில் சொல்ல வில்லை. ஏதேதோ முணகினான்; உளறினான்; ஜுர வேகத்தில் பிதற்றவும் ஆரம்பித்து விட்டான்.

"கந்தா !...கந்தா!..." முரளி உரக்கக் கத்தினான். சற்று நேரத்திற் கெல்லாம் அந்தக் குடிசைக் குள்ளிருந்து விம்மி அழும் குரல் கேட்டது. அந்தக் குரல், முரளியைப் பின் தொடர்ந்து வந்து வெளியே நின்றபடி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அந்த சிறிய உருவத்தின் காதுகளிலும் விழுந்தது.

மறுகணம் முரளி குடிசையை விட்டு வெளியே வந்தான், வேகமாக வீட்டை நோக்கி நடந்தான்.

* * *

பொழுது விடிந்ததும். இரவு முழுதும் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த முரளி எழுந்தான். வெளியே வந்தான். அப்பாவைப் பார்த்தான், காண வில்லை. நல்ல தென்று எண்ணினான். குடிசையை நோக்கி வேகமாக நடந்தான்.

குடிசையை நெருங்கினான்... ஆனால் ... திடுக்கிட்டான்.'சடக் 'கென்று நின்று விட்டான்.

ஏன்? குடிசையின் வாசலில் நின்று கொண்டிருந்த ஒரு மோட்டார் கார்தான் அவனை திகைக்க வைத்தது. அந்தக் காரும் அவனுடைய அப்பாவின் கார்! முரளி திகைக்காமல் என்ன செய்வான்? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஓடினான். குடிசைக்குள் நுழைந்தான்.அங்கே? ...முரளியின் அப்பா! அவர்களின் குடும்படாக்டர்! கந்தனை பரிசோதித்து விட்டு எழுந்தார். டாக்டர் மருந்தும்கொடுத்தார். "நல்லவேளை! சமயத்தில் வந்தோம்; இரண்டு நாளில் சரியாகி விடும்" என்றார்.

முரளி அப்பாவைப் பார்த்தான். அப்பா முரளியைப் பார்த்தார். "அப்பா!..." என்றான் முரளி படபடப்புடன்.

"முரளி நீ கடிகாரத்தையும் விற்க வேண்டாம்; மோதிரத்தையும் விலை கூற வேண்டாம்! உன்கண்ணீர் நேற்றுஇந்தக்குடிசையில்எழும்பியஉன் அழுகுரல் இவை எனக்கு பாடம் கற்றுத் தந்து விட்டன ... இனி கந்தன் உன் கந்தனல்ல; நம் கந்தன்! நேற்று கோபத்தில் அடித்து விட்டேன். உன் அப்பாதானே, வருத்தப்படமாட்டாயே?" என்றார். முரளி எதுவுமே பேச வில்லை; அவனால் பேச முடிய வில்லை. அவன் கண்களில் கண்ணீர்; அது ஆனந்தக் கண்ணீர்!

முரளியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அதே சமயத்தில் பக்கத்துக் குடிசையிலிருந்து ஒரு பொடிப் பயல் உரக்கப் படித்துக் கொண்டிருந்த 'குறள்' அவன் காதுகளில் விழுந்தது.

அன்பிற்கும் உண்டோ;
அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

ஃ ஃ ஃ

உண்மைதானே அன்பால் ஒன்றாகி விட்ட இரண்டு உயிர்களைப் பிரிக்க முடியுமா? முடியவே முடியாது! அந்த அன்பு சிந்தும் கண்ணீரே, அதைக் காட்டும்; சொல்லும்; நிரூபித்து விடும்!

—சொர்ணம்

கவிமணியுடன் ஒரு நாள் !

நாகர்கோவிலில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டின்போது நானும் கழக நண்பர்களும், கலைவாணர் என், எஸ். கே. அவர்களும் நோய்வாய்ப்பட்டிருந்த கவிமணி தேசிக விநாயகம் அவர்களை பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம். நீண்ட நேரம் உரையாடினோம். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பிரச்சினை பற்றி மிக அருமையான விளக்கம்—நமக்கு உடன்பாடான விளக்கம் தந்தார்! மகிழ்ந்தோம்! எங்களுடன் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்களும் இருந்தார்கள். புலவரும், கவிமணியும் ஏதோ ஒருவாதத்தில்ஈடுபட்டனர்.புலவருக்கு பதில் சொல்லு முகத்தான் கவிமணி நீண்ட நேரம் பேசி விட்டு, அப்பாதுரையாரைப் பார்த்து-"நான் சொன்னது சரி தானா" என்று கேட்பதற்கு பதிலாக, "என்ன அப்பா துரை?" என்று கவிமணி ஆவலாகக்கேட்டார். எங்கேயோ சிந்தனையை செலவிட்டிருந்த நமது அப்பாதுரை, உடனே "நானா? காவன்னா அப்பாதுரை!" என்று பதில்சொன்னார். கவிமணி, விஷயம் புரிந்ததா என்று கேட்டார் "என்ன அப்பாதுரை?" என்று!

இவரோ—"கா. அப்பாதுரை" என்று பதில் சொன்னார்—கவிமணி நோயுடன் கல கல வென சிரித்தார்—நாங்களும் சிரிப்பில் மூழ்கி விட்டோம்.

பொதுவாழ்வு

பிறைக்கொடி ஏற்றிய நிறைமதியாளர்

[illegible]★

கையிலே 'காரவன்' சிகரெட் கன்னிப் பெண்ணின் கார் கூந்தலென சுருள்சுருளான புகைஅதிலிருந்து. அருமையான ஷால் வார், அழகான ஷர்வானி வளையாத கழுத்துப் பட்டி, இவ்வளவும் கொண்ட அந்த ஒற்றை நாடி உருவத்தினர் வலக்கரத்தை ஷர்வானிப் பைக்குள் விட்டுக் கொண்டு பேசுகிறார்; "தொலைவிலிருந்து வந்திருக்கும் தூதுவர் அவா களே, இஸ்லாமிய பெருமக்க ளின் சார்பாகப் பேசுகிறேன். எங்கள் மூதாதையர் பலர் முடி சூடி ஆண்டிருக்கிறார்கள். டில்லி தலை நகரில் இன்று ஒளிவிட்டு பிரகாசிக்கும் வர்ன் முட்டும் மாளிகைகளில் பெரும் பகுதி அவர்கள் எழுப்பியது. குதுப் பினர்! — மொகலாயர்களின் கடந்த கால மோகன வாழ்விற் கோர் நினைவுச் சின்னம். தாஜ் மஹால்!—தரணியாண்ட மொகலாய வேந்தன் தாரத்திற்கு தந்திருந்த மதிப்பை வர்ணித்துக் காட்டும் காதற்கோயில்! ஆண்டிருக்கிறோம் நாங்கள், என்பதற்கு சரிதம் காட்டும் சான்றுகள் இவை துரைமகனே"

இஸ்லாமிய இன அரசுகாண துடித்துக் கொண்டிருந்த நேரத்தில் அந்த ஒல்லிய மேனியார் பரங்கியரின் தூதுவரிடம் விளக்கிக் காட்டினர் இவ்வாறு.

'பாகிஸ்தான், பாகிஸ்தான்' என்று கனவிலும், நினைவிலும் அந்த வீரமனிதன் புலம்பிக் கொண்டிருந்த போதெல்லாம் 'இந்தியாவை இரு கூறுக்கு முன் என்னை இரு கூறுக்கி விடுங்கள்' என்று காந்தியார் பிடிவாதம் செய்த போது தான் கொண்ட கொள்கையை வாகை சூடச் செய்து காந்தியாரின் வாதத்தை தூள் தூளாக்கி தேசப் படத்திலே பாகிஸ்தானுக்கு தனி நிறம் இட்டு காட்டியவர் அந்த மகமதியப் பெருங்காவலன்தான். பாகிஸ்தான் பெறுவது சந்தேகம்தான் என்று முஸ்லீம்கள் கூட ஐயுற்றார்களே, அந்த வேளையிலே கூட தனித்து நின்றுவது தாயகத்தை தனியரசாக்க வேண்டுமென்ற வைராக்கியம் ஆழமாகப் பதிந்திருந்தது அந்த ஒரே மனிதனின் உள்ளத்தில்தான்!

1947ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் தேதி வரை 'பாகிஸ்தான் எங்கே' என்ற கேலிப் பேச்சை மாற்றி 14ம் தேதி காலை புலர்ந்ததும் 'புது அரசு பாருங்கள்—பாகிஸ்தான் தனி அரசு காணுங்கள்' என்று பூமண்டலத்திற்கு அறிவித்து பசுமையும், வெண்மையும் கலந்த பிறைக் கொடியை பறக்க விட்ட நிறைமதியாளர் அவரேதான். அது மட்டுமா?

டொமீனியன் அந்தஸ்துப் பெற்ற நாடுகளில் ஆங்கிலேயர் ஒருவர்தான் கவர்னர் ஜெனரலாக இருக்க முடியும் என்ற விதியை படுசூரணமாக்கி தானே பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலானார்,

ஃ ஃ ஃ

காயிதே அஃலம்!—அரசியல் தடாகத்தில் இதழ் விரித்து மலர்ந்திருந்த ஒரு லட்சியத் தாமரையின் பெயர்தான் இந்தச் சொல் என்றாலும்—பலருக்குத் தெரியாது. சொன்னால் திகைப்பார்கள்—அவர்தான் 'ஜின்னா' என்றால் அப்படியா என்பார்கள். குஜராத்தி மொழியிலே 'ஒல்லியான உடல்' என பதைக் குறிக்கும் 'ஜின்னா' என்ற சொல்லே காயிதே அஃலமுக்கு காரணப் பெயராக மட்டுமல்ல, இயற் பெயராகவும் அமைந்து விட்டது—இல்லை—அமைக்கப் பட்டு விட்டது. ஜின்னா, சீரிழந்து, ஜீவகளை இழந்து இங்கு மங்குமாக சிதறிக் கிடந்த வர்க்கத்தினரின் முகங்களிலே முறுவல் பூக்கச் செய்து அவர்கள் உள்ளங்களிலே என்றென்றும் அணையாத ஜீவஜோதியாகி விட்டார்; வரலாற்றுக்கு ஒரு திருப்பு முகத்தை ஏற்படுத்தி, அங்கே ஒரு வாழ்வுப் பூங்காவை சமைத்து விட்டார்.

லண்டன் திருநகரில் நாடகங்களிலே நடித்து, பம்பாய் பட்டணத்திலே வக்கீல் தொழில் நடத்துங் காலை, வண்டிக் கட்டணத்திற்குக்கூட காசில்லாமல் கால் நடையாகவே நடந்து சென்று 'இல்லாமை'யின் இரும்பிப் பிடியிலிருந்து கொண்டே உழைத்து துரும்பாகி பொருளீட்டி ஒப்பற்ற நாட்டை உருவாக்கினர் என்பதை நினைக்கும் போது, 'மனித வாழ்க்கையின் கட்டிடம் நற்குணம், தைரியம், சுறு சுறுப்பு, விடா முயற்சி என்ற நான்கு தூண்கள் மீது தான் கட்டப் படவேண்டும்' என்ற ஜின்னாவின் தத்துவம் எவ்வளவு அனுபவப் பூர்வமானது என்பது புலனாகிறதல்லவா?

ஜின்னா எப்போதுமே தனித் தன்மை வாய்த்தவர். தன் மனதில் பட்டது சரியென்று விட்டால் அவர், கடைசிவரை தலை வணங்கமாட்டார். ஒருமுறை நாகபுரி காங்கிரசில் மௌலானா முகமதலியை ஜின்னா 'மிஸ்டர் முகமதலி' என்று அழைத்த போது, 'மௌலானாமுகமதலி' என்று அழையுங்கள் என்று கூட்டத்தின் நடுவே இருந்து பெரும் குரல் கிளம்பிற்று, சித்தம் கலங்கிடவில்லை ஜின்னா. 'உங்களின் உத்தரவுப்படி என்னால் நடக்கமுடியாது, ஒருமனிதனை எந்தஅடைமொழியிட்டு அழைக்க வேண்டுமென்பதுஎன்னுடைய உரிமை, மகமதலியின் மௌலானா உரிமையை நான் அங்கீகரிக்க முடியாது' என்று அலட்சியமாகப்பதில் சொன்னார் ஜின்னா. பொதுக் கூட்டங்களில் மட்டுமல்ல, மாநாடுகளில் மட்டுமல்ல; நீதிமதி மன்றமாக இருந்தாலும் தனது கௌரவத்திற்கு பங்கம் ஏற்படுமாயின் ஜின்னா விட்டுக் கொடுக்க மாட்டார்; அங்கும் அறிவின் கூர்மையால் தனது சுயமரியாதையை நிலை நாட்டியிருக்கிறார். ஒரு தடவை பிரிட்டீஷ் நீதிபதி ஒருவர் ஜின்னாவைப் பார்த்து 'மிஸ்டர் ஜின்னா தாங்கள் கீழ்க் கோர்ட்டில் ஒரு சப்ஜட்ஜ் முன் பேசுவது போன்று பேசுவதை மறந்து விடுங்கள்' என்று சொன்னார். ஜின்னாவுக்கு ஆத்திரம் தாங்க வில்லை. 'நீதிபதி அவர்களே, உங்கள் முன்நின்று வாதிடுவது ஒரு மூன்றும்தர வக்கீலல்ல என்பதையும் நீங்கள் மறந்து விடக்கூடாது" என்று உரத்த குரலில் கூவினர் மற்றொரு நீதிபதி ஒருவர் 'மிஸ்டர் ஜின்னா, என்னுடைய நரை மயிருக்காகவாவது நீங்கள் எனக்கு மரியாதை செய்யக் கூடாதா?' என்று கேட்டார, ஜின்னா சிரித்துக் கொண்டு, 'நரை மயிருக்குக்கீழே அறிவு இருந்தாலொழிய நான் அந்த நரை மயிரை கௌரவிக்கப் போவதில்லை' என்றார்.

ஜின்னா என்றுமே தன்னை ஒரு முஸ்லீம்என்றுசொல்லிக்கொள்ளத் தயங்கியதில்லை. காந்தியார் உட்பட காங்கிரஸ் தலைவர்களெல்லாம் ஜின்னாவோடுபேச்சு வார்த்தை நடத்த வந்த நேரத்திலெல்லாம், 'நான் முஸ்லீம் லீக்கின் பிரதி நிதித்துவ சபை, நீங்கள் காங்கிரஸ் இந்துக்களின் பிரதி நிதித்துவசபை என்ற, அடிப்படையில் பேசுவதாக இருந்தால்தான் நான் உங்களோடு பேச்சு வார்த்தை நடத்துவேன்" என்று திட்ட வட்டமாகச் சொல்லி விட்டார். அவ்வளவு கண்டிப்பான பேர்வழி ஜின்னா.

தனியரசு கோரி முஸ்லீம் லீக் லாகூரில்தீர்மானம் நிறைவேற்றிய போது, காங்கிரஸ் ராஷ்ட்டிர பதியாக இருந்த மௌலானாஆசாத் ஜின்னாவுக்கு தந்திஒன்று அனுப்பினார். அதில் தந்தி ரகசியமானது. காங்கிரசின் டில்லித் தீர்மானம், ஒரு தனிப்பட்ட கட்சிக்குச் சொந்தமில்லாத் கூட்டு சர்க்காரை அமைக்க வேண்டுமென்பது தான். இரு சமுதாயக் கொள்கைக் கேயன்றி, மற்ற எதற்கும் இணங்கிப் போகக் கூடாதென்பது லீகின் லட்சியமா?" என்று குறிப்பிட்டிருந்தார். அதற்கு ஜின்னா என்ன பதில் கொடுத்தார் தெரியுமா?

"தங்களுடைய தந்தியை ரகசியமாய் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. காங்கிரஸ் ஒரு தேசிய மகாசபைஎன்று வெளி நாட்டாரிடம் கூறி அவர்களை ஏமாற்றுவதற்காகத்தான் தாங்கள் காங்கிரசின் பொம்மைத் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறீர்கள் என்பதை தங்களால் உணர முடிய வில்லையா?' என்று காரசாரமாக பதில் தந்திகொடுத்திருந்தார் ஜின்னா. வட்ட மேஜை மாநாட்டின் போது சிறுபான்மையினரின் துணைக் கமிட்டியில் அங்கம் வகிக்க அழைத்த போது கூட, ஜின்னா, 'வெள்ளை எசமானரின் முன் நம்முடைய அழுக்குத் துணிகளை பிழிய நான் விரும்பவில்லை' என்று சொல்லி விட்டார்.

ஜின்னாவின் ஆங்கிலப் பேச்சு உயர்தரமானது, நல்ல வார்த்தைகளையே அவர் மேடைகளில் உபயோகிப்பார். புத்தகங்களில் அவருக்கு ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலேயே அவருக்கு விருப்பம் அதிகம்.

ஜின்னா எப்போதுமே ஆடம்பர ஆடைகள் உடுத்துவதிலே மோகங் கொண்டவர். வாழ்வின் இறுதி அத்தியாயத்தில், நோய்வாய்ப் பட்டு படுத்த படுக்கையில் இருந்த போது கூட ஜின்னா புத்தாடை உடுத்தத் தயங்கியதில்லை. "தினம் தினம் ஆடை மாற்றி பழகி விட்டேன், இனி அதை என்னால் கட்டுப் படுத்த முடியாது டாக்டர்' என்று டாக்டர்களிடம் எத்தனையோ முறை வாதிட்டிருக்கிறார்.

ஜின்னா கடைசிவரை முஸ்லீம் சமுதாயத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து, வாழ்வை முடித்துக் கொண்டார். பழுத்த காங்கிரஸ் வாதியாக இருந்து கொண்டு, முஸ்லீம்லீக் துவக்கப் பட்டதிலிருந்து அதை எதிர்த்து வந்த ஒரு காங்கிரஸ் தலைவனை 1913ல் அவர் லீக் இயக்கத்தில் பங்கு ஏற்றபின் நம்பிக்கை நட்சத்திரமாக்கிக் கொண்ட பெருமை முஸ்லீம் சமுதாயத்தைத்தான் சாரும். அந்த சமுதாயமும் அவருக்கு அவ்வளவு கௌரவமளித்தது — அவரும் அந்த இயக்கத்திற்கு அத்துணை நன்றியுடையவராகநடந்து கொண்டார்.

'குட்டையைக் குழப்புகிறவர்' ஜின்னா என்று எண்ணிய அதிமேதைகளெல்லாம்,

[10-ம் பக்கம் பார்க்க]

கடைசிப்பக்கம்

பெருமாள்—ஆமதாபாத்.

(?) வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது யார்? கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையா? சிருங்கேரி மடத்து பண்டார சன்னதியா?

இருவருமே வெள்ளத்திலே தான் அடித்துச் செல்லப்பட்டனர். கவிமணி, மனிதரான காரணத்தால் கால வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டார்; 81ம் வயதில்! சிருங்கேரி சாமிகள் அவதார புருஷர் என்பதால் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்; 62ம் வயதில்!

ஒய்.வி. கந்தசாமி-தேவகோட்டை

(?) கொள்கைப் பிரச்சாரம் செய்ய இடமளிக்கும் பட முதலாளிகளை நான் வெறுக்கிறேன் சரிதானு?

அதற்கு இடமளிக்க மறுக்கும் படாதிபர்களை நானும் வெறுக்கிறேன்.

சுப. பாண்டி—மதுரை.

(?) மதம் பிடித்த ஆனையானை யின் மேல் இட்ட முகபடாம் எதைப் போன்றது?

மலை முகட்டில் குவிந்து கிடக்கும் கருமேகத் திரளைப் போன்றது. தோழரே, இந்தப் பதிலில் அச்சுப் பிழை எதுவும் நேரவில்லை என்பதை நினைவூட்டுகிறேன்.

(?) அரும்பு தோன்றும்போது அடங்கியிருக்கும் மணத்தைப் போல், அழகியின் புன்முறுவலின் தோற்றத்தில் அடங்கியிருக்கும் குறிப்பு ஒன்று உளது அது யாது?

தூது!

பி. மலையான்—சென்னை.

(?) ஈ. வெ. ரா.வையும் அவரது கழகத்தினரையும்பக்தர்களாக்குவதாக குன்றக் குடியார் கூறுகிருரே; முடியுமா?

இவரென்ன ஆக்குவது; ஏற்கனவே அவர்கள் திராவிட தேச பக்தர்கள்தான்!

அ. சங்கர நாராயணன்—விருதை

(?) திராவிடர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆரியர்களின் கையிலிருந்து தப்பிப் பிழைத்து இன்று தலை தூக்கி யிருக்கும் சரித்திரச்சுவடிகள்தான்!

இரா, சகதீசன்—அம்பத்தூர்

(?) மனிதன் நெஞ்சில் கவலையேற்படக் காரணம் அவனுடைய நாகஸ்திகமே என்று ஆனந்தவிகடனில் வந்திருக்கிறதே; அது பற்றி உங்கள் கருத்தென்ன?

கவலைப்படாத ஒரு நாயனரையோ, ஆழ்வாரையோ, ஆஸ்திகரையோ காட்டட்டும்; பிறகு பேசுவோம் அதைப் பற்றி!

கதிரவன்—அரிமழம்.

(?) அறிவு, ஆற்றல்-இரண்டுக்குமுள்ள தொடர்பு என்ன?

இரண்டின் முதல் எழுத்துக்களும் "—அ—" "ஆ"-என்று வரிசையாகவே ஆரம்பிக்கின்றன. அறிவும் ஆற்றலும் சாணைக் கல்லும் கத்தியும் போன்றவை.

எம். மணி—சேலம்.

(?) இங்கு பேசிய சில திராவிட கழகத் தோழர்கள் தி. மு. க. வை தாக்கி தனிப்பட்டவர்களையும் ஏசினர்களே ஏன்?

நீர் இப்போதுதான் புதிதாக அந்தப் பொதுக் கூட்டத்திற்குப் போயிருக்கிறீர் போலும்!

குமரவேல்சாமி—பேங்களூர்.

(?) பராசக்தியின் மூலக்கதை எழுதியது யார்?

நேஷனல் பிக்சர்சார் மிக நேர்மையாக திரையிலேயே போட்டிருக்கிறார்களே, மூலக் கதை யாருடையது என்று!

இரா. விசுவநாதன்—திருவாரூர்.

(?) தேசீய ஏடுகளைத் தீயிலிட்டவர் அந்த ஏட்டுக்கே கருத்துக் காவியம் வரைய முற்பட்டது எதனல்? காலமாறுபாடா? கோள்கை மாறுபாடா?

கால மாறுபாடுதான்! தீயிட்டவருக்கல்ல! தேசீய ஏடுகளுக்கு! இல்லாவிட்டால் தீயிட்டகாரத்தால் தீந்தமிழர் சரிதத்தைத் தீட்டித் தருமாறு வேண்டுவார்களா?

ஈ. கமால்தீன்—சென்னை 1

(?) என் நண்பர் "கடவுள் இருக்கிறார்" என வாதிடுகிறார். நான் "இல்லை" என்று கூறுகிறேன். தங்கள் அபிப்பிராயம் என்ன?

இல்லை என்கிற போது உங்களாலும் கடவுளைக் காட்ட சாத்யப்படாது! "இருக்கிறது" என்பவர் கடவுளைக் காட்டாததாலேயே நீங்கள் "இல்லை" என்று சொல்கிறீர்கள் என்பதும் புரிகிறது. பொதுவாக இந்த ஆராய்ச்சி தேவை யற்ற ஒரு வீண் தொல்லை.

விசயசேகரன்
தேன்கனிக்கோட்டை

(?) திருவள்ளுவரின் உண்மை உருவம் எது? அவர் சமயம் என்ன?

திருவள்ளுவரின் உண்மையான உருவம் திருக்குறள்தான்! அவர் சமயம் சுயமரியாதை சமயம்:

போ. மகிழன். எஸ். ஜி. பட்டி.

(?) தி. மு. க. மாநாடுகட்கும் மற்ற கட்சி மாநாடுகட்கும் உள்ள வித்தியாச மென்ன?

திராவிட இயக்க கூட்டங்களிலும் மாநாடுகளிலும் நாட்டு விடுதலை முழக்கம் கேட்கும். மற்ற கட்சி மாநாடுகளில் நமக்கு ஒரு நாடு இருக்கிறது என்ற பேச்சே கிளம்பாது!

எம். ஏ. அம்சா மேட்டுப்பாளையம்

(?) உலகில் ஏமாற்றி வாழுகிறவர்கள் கூட்டத்தை ஆண்டவனு படைத்தான்?

இல்லை — இல்லை— ஆண்டவனைத்தான் அவர்கள் படைத்தார்கள்.

பி. குஞ்சிதபாதம்.
[திண்டுக்கல்.

(?) ஓய் எழுத்தாணியாரே! நீர் எந்தப் பள்ளிக் கூடத்தில் படித்தீர்? பதில் ஒழுங்காகச் சொல்லும்.

பதில் ஒழுங்காகச் சொல்லப் பயிற்றுவித்த ஈரோட்டுப் பள்ளிக் கூடத்திலே படித்தவன் நான்.

துரை-முருகேசன். காரமடை.

(?) 'சாவு' மட்டும் எல்லோரையும் ஒன்றுக வரவேற்பது ஏன்?

அதற்கு மாட மாளிகையோ மந்திரி பதவியோ, எதுவும் கிடையாது அதனுல்!

சண்முகவேல்—திருச்சி.

(?) தினத்தந்தி கார்ட்டூனில் தி. மு. கழகத்தை இனிமேல் ஒரு பெண்ணுக சித்தரிக்கப் போவதாக கூறப்படுகிறதே ஏன்?

எவ்வளவோ நாள் முயற்சித்தும், அண்ணவைப் போல உருவம் சரியாக எழுத வரவில்லையாம். அதனுல் சுலபமாக ஒரு பெண் படமே போட்டுவிட முடிவு கட்டியிருக்கிறார்கள்.

விநாயகம்—திருச்சி.

(? கழகத் தோழர்கள் எழுதும் திரைப்படங்களுக்கு படமுதலாளிகள் பூஜை முதலியன செய்து ஆரம்பிக்கிறார்களே; இது ஆச்சரியமாயில்லையா? இதற்கென்ன பதில் சோல்கிறீர்கள்?

ஆச்சரியம் அதுவல்ல தோழரே; பூஜை செய்யும் நம்பிக்கை படைத்தவர்கள் கழகத் தோழர்களின் படங்களை எடுக்கிறார்களே; அதுதான் ஆச்சரியம்.

இலங்கை தி. மு. க.

இலங்கை தி. மு. க. வின் பொதுக்குழு தேர்தல் கூட்டம் 26–9–54 ஞாயிறு முற்பகல் 10-மணிக்கு கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் ஆரம்பமாகியது. இ. தி. மு. க. பொறுப்பாளர் இரா. அதி-மணி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி தோழர் என். கதிரவன் அவர்களை பொதுக்குழுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார். தலைவர் முகவுரைக்குப்பின் பொறுப்பாளர் இரா. அதி. மணி அவர்கள் ஆண்டறிக்கையும் வரவு செலவு கணக்கையும் படித்துக் காட்டி அங்கீகரிக்கப்பட்டது. தலைவர் முடிவுரைகூறி, பொதுக் குழுத் தேர்தல் கூட்டத்திற்கு தோழர் ஏ. எம். துரைசாமி அவர்களைத் தலைமை தாங்கி நடத்தித் தரும்படி கேட்டுக் கொண்டார்.

தோழர் துரைசாமி அவர்கள், தேர்தல் நடைபெற வேண்டிய முறை பற்றியும் பொறுப்புகள் பற்றியும் விளக்கிக் கூறியபின் இ. தி. மு. க. பொதுச் செயலாளர் பதவிக்கு தோழர் இரா அதி. மணி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

முரசொலி

ஆண்டு சந்தா ரூ. 6–0–0
ஆறு மாத சந்தா ரூ. 3–8–0

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மு. கருணநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62. எல். பி. சன்னதி தெரு. ராயப்பேட்டை. சென்னை–14.